84

684

# திருநாளைப் போவார்

7-NOV1933

எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை
பிரசுரகர்த்தர்
திருநெல்வேலி ஜங்ஷன்.

[விலை 6 அணா

N33
78075

# திருநாளைப் போவார்

P. S. ஆசாரியர்

எழுதியது

S. R. சுப்பிரமணிய பிள்ளை,

பப்ளிஷர் & புக்ஸெல்லர்,

திருநெல்வேலி ஜங்ஷன்.

பதிப்புரிமை] 1933 [விலை அணு 6

# முகவுரை

இச் சிறு நூலிலே அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவராய் விளங்கும் திருநாளைப் போவார் என்னும் நந்தனாரது திவ்விய சரித்திரம் கூறப்பட்டிருக்கிறது.

நந்தனாரது சரித்திரம் 'குலக்கவி'யாகிய சேக்கிழார் சுவாமிகளாலே பெரிய புராணத்தில் 35 திருவிருத்தங்களால் பாடப்பட்டிருக்கிறது.

அச் சரித்திர நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு, கோபாலகிருஷ்ண பாரதிகள் 'பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி' யென்னும் இலக்கணத்தைத் தழுவி, இசைநூலமைதிகள் அமைத்துப், பலவகை ரசங்களுக்கு இடனாய், நந்தனார் சரித்திரக் கீர்த்தனை யென்னும் வழிநூலைச் செய்தனர். நாடக மேடைகளிலும் கதாப் பிரசங்கங்களிலும் அவ் வழிநூற் போக்கே கையாளப்பட்டு வருகிறது.

அவ்வழிநூலைப் பின்பற்றியே இனிய செந்தமிழ் நடையில் இஃது எழுதப்பட்டிருக்கிறது.

இந்நூல் உயர்தரப் பள்ளிக்கூடங்களிற் கற்கும் மாணவர்களுக்கு மிகவும் உபயோகமாயிருக்கு மென்பது எங்களது முழு நம்பிக்கை.

பிரசுர கர்த்தா

# உள்ளுரை


| அத்தியாயம் | விஷயம் | | | பக்கம் |
|---|---|---|---|---|
| 1. | ஓர் புலைச்சேரி | ... | ... | 1 |
| 2. | சேற்றிலே பிறந்த செந்தாமரை.. | | ... | 7 |
| 3. | பக்தி முதிர்ச்சி | ... | ... | 10 |
| 4. | திருப்புன்கூர் யாத்திரை | ... | ... | 17 |
| 5. | நாளைப் போவேன் | ... | ... | 26 |
| 6. | சேரியில் பக்தி வெள்ளம் | ... | ... | 30 |
| 7. | சேரிப் பெருங்கிழவன் | ... | ... | 39 |
| 8. | ஞானபக்தியும் மூடபக்தியும்... | | ... | 47 |
| 9. | உயர்தர வியவசாயம் | ... | ... | 45 |
| 10. | ஆதனூர் வேதியன் | ... | ... | 62 |
| 11. | ஆண்டானும் அடிமையும் | ... | ... | 67 |
| 12. | சோதனையும் வெற்றியும் | ... | ... | 75 |
| 13. | சிதம்பர தரிசனம் | ... | ... | 87 |



சிதம்பரம் கோவில்

# திருநாளைப் போவார்

## முதல் அத்தியாயம்

### ஓர் புலைச்சேரி

காவிரி நாடாகிய சோழ வளநாடு முன்னாளில் தமிழ் நாட்டின் சிங்காரப் பூங்காவனமாக விளங்கியது. நாட்டு மக்கள் எப்போதும் பலவகையான மங்கலத் தொழில்களில் ஈடுபட்டிருந்தனர். எங்கும் மங்கல வாத்தியங்கள் இசைத்தன. எவ்விடத்தும் பலவகையான மலர்க்கொடிகளும் செடிகளும் பலன்தரும் மரங்களும் செழித்து வளர்ந்திருந்தன. யோகமும் தவமும் ஒரு புறம், போகமும் பொலிவும் ஒருபுறம். யாகம் சடங்கு முதலியவற்றில் ஈடுபட்டுப் பொழுது போக்கும் முனிவர்கள் ஒருபுறம், உற்சாகமாக ஊஞ்சலாடிப் பொழுது போக்கும் காதலர் ஒரு புறம். இவ்வாறு இன்பமும் புண்ணியமும் ஒருங்கே பொங்கிய சோழ நாடு அழகுத் தெய்வத்திற்கும் அறிவுத் தெய்வத்திற்கும் ஓர் அருமைத் திருக்கோயிலாகத் திகழ்ந்தது.

இந்நாட்டின் ஒரு பகுதியான மேற்கா நாட்டில் ஆதனூர் என்னும் பழம்பதி ஒன்றுண்டு. இவ்வூரில், முன்னுளில் எங்கே பார்த்தாலும் தளிர்களும் கிளைகளும் செறிந்த செழுமையான மரங்கள் கூட்டம் கூட்டமாக நிறைந்து வளர்ந்தோங்கி நின்றன. காலம் தவருது மழை பொழியும் மேகக் கூட்டங்கள், அவ்வூரைச் சார்ந்த காட்டிலும் சோலையிலும் சேர்ந்து சஞ்சரித்தன. வயல்களிடத்து உண்டாகிய வளங்களும் தோட்டங்களினின்றும் வருகின்ற வளங்களும் அந் நாட்டுப் புறமெங்கும் நிறைந்திருந்தன. இத்தகைய பொருள் வளத்தோடு அவ்வூரில் குடிவளமும் பொங்கிப் பொலிந்தது. சுருங்கக் கூறுமிடத்து, ஆதனூர் சோழவள நாட்டின் திலகமாகத் திகழ்ந்தது என்னலாம்.

இத்தகைய அரும் பெருஞ் சிறப்பு வாய்ந்த ஆதனூரில், வயல்களின் புறத்திலுள்ள பெரிய கரையில் ஒரு புலைச்சேரி காணப்பட்டது. இச்சேரியில் சின்னஞ் சிறிய பழைய குடிசைகள் நிறைந்திருந்தன. இக்குடிசைகளின் கூரைகள் சுரை, பீர்க்கு முதலிய கொடிகளால் மூடப்பெற்றிருந்தன. முற்றங்களில் புலையர்கள் பச்சை மாமிசத் துண்டுகளை உலரும்படி கோத்துக் கட்டித் தோரணம் போல் தொங்க விட்டிருப்பார்கள். இம்

மாமிசத் துண்டுகளின்மீது ஆசைகொண்டு நாய்கள் குதித்துக் குரைத்து ஒன்றோடொன்று கலகமிட்டுக் கொண்டிருக்கும். இத்துண்டுகளைச் சமயம் பார்த்துக் கவர்ந்து கொள்ள வேண்டுமென்று பருந்துகள் வட்டமிட்டுப் பறந்து கொண்டிருக்கும். கொல்லையருகில் வெள்ளெலும்புகளும் நரம்புகளும் குவிந்து கிடக்கும். கேணிகளிலும் குட்டங்களிலும் தோல்கள் ஊறிக் கொண்டிருக்கும். பல இடங்களிலும் மீன்கள் உலர்ந்து கொண்டிருக்கும்.

இச்சேரியில் வசிக்கும் புலையர்கள் ஒருவருக்கொருவர் நெருங்கிய உறவினராய் அமைந்து, உழு தொழில் செய்து பிழைத்து வந்தனர். வாழ்க்கைக்குரிய பலவகையான வசதிகள் நிறைந்திருந்த ஆதனூரில், புலையர்கள் மாத்திரம் நாகரிக வாழ்க்கைக்குரிய வசதி பெறாது, அழகு உடம்போடும் அறியாமையில் ஆழ்ந்த உள்ளத்தோடும், 'உயர்ந்த' சாதியினர் இகழ்ந்து ஒதுக்க, ஒடுங்கி இருகால் விலங்குகளாகத் தாழ்ந்து வந்தனர்.

அவர்கள் கோழிச் சேவல்களது 'கூக்குர'லைக் கேட்டு விழித்துக்கொண்டு தங்கள் வேலைகளைச் செய்யத் தொடங்குவர்; இரவு அடையும் வரை, உடல் ஓய ஊருக்கு உழைத்து வருவர். இவ்வாறு நிலத்தைப் பண்படுத்துவதில் தம்மை முற்றும்



இழந்த இம் மக்களுக்கு, மனத்தைப் பண்படுத்திக் கொள்வதற்குரிய வசதியாவது அவகாசமாவது ஒரு சிறிதும் அமையவில்லை.

சுற்றுப் பொருள்களும் இவர்களது வாழ்க்கையை வசமாக்கி வளர்ந்தோங்கச் செய்யும் நிலையில் அமைந்திருக்கவில்லை. கோழி முதலிய புட்களும் நாய்களும் புலைப்பாடியில் எப்பொழுதும் நீங்காது கூட்டமாகச் சூழ்ந்து கொண்டிருந்தன. தென்னை மரங்களின் அருகிலுள்ள முழைகளில் நாய்கள் குட்டி போட்டிருந்தன. கூடுகளில் கோழிப் பெடைகள் முட்டையிட்டு ஒடுங்கி அடைகாத்துக் கொண்டிருந்தன. புலைக்குல உழத்தியர்களும், புற் குடிசைகளிலும் வயலின் புறத்திலும் தாம் ஈன்றெடுத்த குழந்தைகளை மரங்களின் நிழலில் உறங்கச் செய்து கொண்டிருப்பார். மற்ற வேளைகளிலெல்லாம், அவர்கள் தங்கள் தொழில் முயற்சிகளிலேயே ஈடுபட்டிருப்பர்.

நாய்களின் குட்டிகள் அங்கு மிங்கும் துள்ளிக் குதித்து விளையாடிக் கொண்டிருக்கும். புலைச்சேரியிலுள்ள சிறுவர்களும், அரையிற் கட்டிய இருப்பு மணிகள் ஒலி செய்ய ஓடிச்சென்று மிருதுவாகக் குரைத்துக் கொண்டிருக்கும் நாய்க்குட்டிகளோடு குதித்து விளையாடுவர்.

புலையர்கள் தங்களோடு குடியிருக்கும் பிராணி களைப் போலவே தாமும் பகுத்தறிவு பெறாது வாழ்ந்தனர். தம்மைச் சுற்றிலுமுள்ள நண்டு நத் தைகளைப் போல் வெளி உலகினை அறியாது வாழ்ந்த இம்மக்கள், தங்கள் வாழ்க்கையில் ஒரு சிறிதும் அதிருப்தி கொள்ள வில்லை. 'எல்லாம் விதிதான்' என்ற அசையாத நம்பிக்கையோடு, அவர்கள் 'உழவுமாடு' போலவே உழைத்து வந் தார்கள். அவர்கள் உழுது பயிர்செய்து கொண் டிருந்த நிலத்தின் பொறுமை, அந்நிலத்தின் புதல்வர்களான அவர்களிடத்திலும் இயற்கையாக அமைந்திருந்தது.

புலையர் வாழ்க்கை துன்பத்தால் இழைக்கப் பட்ட அடிமை வாழ்க்கையாகவே யிருந்தது. இத் தகைய வாழ்க்கை, விரிந்த அறிவும் பரந்த அனு பவமும் பெறாது பாழ் அடைந்து கிடந்ததென்ப தில் வியப்பொன்று மில்லை.

எனினும், புலைப்பாடியில் வாழ்ந்த புலையர்கள், 'பழி தொழிலும் இழிகுலமும் படைத்த' தங்க ளுக்கு இதற்கு மேலான வாழ்வு இல்லையென்றே கருதுவாராயினர். தங்களுக்குக் கிடைத்த அற்ப மான ஓய்வு நேரங்களில் அவர்கள் 'தெந்தினம்' பாடி விளையாடிக் கொண்டிருப்பர். சில சமயங்

களில் தெருவாசற் புறத்தில் நின்று ஏசிக்கொண்டு கொண்டாட்டமா யிருப்பர்.

வேலை முடிந்தபின் புலைக்குல மாதர்கள் நெற் கதிர்களைச் சூடிக்கொண்டு கள்ளுண்டு கவலைகளை யும் கஷ்டங்களையும் மறந்து கைகொட்டிக் கொக்க ரித்துக் கூத்தாடுவர். புலையர்களும் அமிதமாகக் குடித்துவிட்டு, மரங்களில் தூக்கி இருக்கும் பறை களை யெடுத்து, அக்கூத்துக் கிசைய அடித்து முழக்குவர்.

---

# இரண்டாம் அத்தியாயம்

## சேற்றிலே பிறந்த செந்தாமரை

இத்தகைய புலைச்சேரியில், சேற்றிலே புதி தாக முளைத்ததொரு செந்தாமரை போல் நந்தனர் என்னும் பெயருடைய பக்தமணி ஒருவர் தோன்றி னர். அவரது கரிய மேனிக்கு இசைய, அவரது பெற்றோர் இரும்பால் செய்த காப்பாலும் காற் சிலம்புகளாலும் அரைச்சதங்கைகளாலும் அவ ரை அலங்கரித்தார்கள்.

விசேஷமான இயற்கை யறிவோடு பிறந் திருந்த நந்தனர் நாளடைவில் ஓதாது உணர்ந்த ஞானிகளில் ஒருவராக வளர்ந்தார். அவர் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக

வளர வளர, அவரது இதயத்திலுள்ள பக்தியும் மேன் மேலும் வளர்ந்து கொண்டு வந்தது. அவர் தம்மோடொத்த சிறுவர்களுடன் கூடி விளையாடுவார். அக்காலத்திலும் அவர் உள்ளம் பக்தியை விட்டு விலகவில்லை. அவர் நாய்களுக்கும் குட்டிகளுக்கும் அன்போடு உணவு அளிப்பார்; அவருடைய பக்தி ஜீவகாருண்யமாகத் தழைத்து விருத்தியாகி வந்தது.

நந்தனருக்கு வயது பதினாறாயிற்று. கல்வி மணத்தை அவர் ஒரு சிறிதும் அறிந்ததில்லை. ஆனால் தமது குலத்தொழிலாகிய பயிர்த்தொழிலில் அவர் தேர்ச்சி பெற்றிருந்தார். அத்தொழிலில் அவர் தமது பெற்றோருக்கும் தோழர்களுக்கும் உற்சாகமாக உதவி செய்வார். வேலை முடிந்த பின் தமது தோழர்களோடு ஆதனூர் வழியாகச் செல்லும் பிரயாணிகளையும் துறவிகளையும் சந்தித்து அவர்களோடு உரையாடுவர். இராப்பொழுதில் உள்ளூரிலும் வேறு ஊர்களிலும் நடைபெறும் உற்சவங்களைக் கண்டு களித்துத் திரும்புவார்.

தக்கவயது வந்ததும், நந்தனர் உழுதொழிலிலும் பலவேறு நற்குண நற்செய்கைகளிலும் தமக்கு வேறொருவரும் ஒப்பில்லை என்று சொல்லும் புகழ் பெற்று விளங்கினர். பிள்ளைப் பூச்சி சேற்றிலிருந்

தாலும், அதன்மேல் சேறு ஒட்டுவதில்லை. அவ்வண்ணமே நந்தனர் சேரியிலிருந்தாலும், புலைச்சேரி அவர் உள்ளத்தைத் தீண்டவில்லை. அவர் புலையர்களின் உழைப்பிலும் கஷ்டங்களிலும் பங்கு எடுத்துக் கொண்டார்; எனினும் மதுபானம் முதலிய சேரிப் பழக்கங்களில் கலந்து கொள்ளாமலே விலகி வாழ்ந்தார். உடம்பையும் உள்ளத்தையும் ஒருங்கே மாசடையச் செய்யும் பழக்க வழக்கங்களும் சுற்றுப்பொருள்களும் அன்பு மயமான அவர் சரீரத்தையும் மனத்தையும் கெடுக்கத் துணியவில்லை.

அவரது பக்திக் காதல் அவரது மனத்தைப் பண்படுத்தியது. தொடக்கத்தில் அவர் தமது நிலைமைக்கு இசைந்த நெறியில் நின்று அறம் வளர்த்தார். இவ்வாறு செய்து கொண்டே, சிவமெனும் செம்பொருளுக்குத் தொண்டு பூண்டொழுகும் செந்நெறியில் நிலைபெற்றவரானர்.

பக்தியின் பொருள் நற்குணம், பக்தியின் பயன் நற்செயல் என்னும் உண்மை, நந்தனரது வாழ்க்கையில் நன்கு புலனாயிற்று. பக்தியின் வடிவமாகத் திகழ்ந்த நந்தனர், 'கோதிலாத குண'க்கடலாகவும் காணப்பட்டார். ஒழுக்கமே இவரது பக்தியின் உறுதியான அடிப்படையாகவும் உயிர் நிலையாகவும் முடிமணியாகவும் ஒளிர்ந்தது.

பக்த மணியின் தூய உள்ளம் குழந்தையுள்ளம்போல் கள்ளங் கபடமற்று விளங்குகிறது. சுத்த அறிவோடும் மெய்யன்போடும் குழந்தையுள்ளமும் பெறுவோரே, உயர்தர வாழ்க்கைக்குரிய பெருநெறி பிடித்து ஒழுகுவோராவர். இத் தெய்விக நிலை நந்தனாரிடம் நன்கு அமைந்திருந்தது.

இத்தகைய குணுதிசயம் வாய்ந்த பக்தர்கள், எத்தனையோ கோடி ஜன்மங்களில் செய்த புண்ணியங்களின் பயனுக அவதரிக்கின்ருர்கள் என்றும் இவர்கள் இறைவனது பேரின்ப சுகத்தைக் கொள்ளை கொள்ளப் பிறக்கின்ருர்கள் என்றும் பெரியோர் கூறுவர்.

---

## மூன்ரும் அத்தியாயம்

### பக்தி முதிர்ச்சி

நந்தனுர், 'ஆதனூர் வேதியர்' என்று பிரசித்தி பெற்றிருந்த ஒரு வேதியருக்கு அடிமையாக இருந்தார்: 'சூது வாது ஒன்றும் தெரியாதவர், சுத்தமான பக்தர்' என்றும் 'வெகு நல்லவர்' என்றும், எங்கும் புகழ்பெற்ருர். இவரது 'குழந்தையுள்ள'த்தில் விழுந்த 'பக்தி' யென்னும் வித்து அன்பு நீரில் முளைத்தெழுந்து, ஒழுக்கம்தழுவி ஓங்கி வளரலுற்றது.

நம்மால் விரும்பப்பட்டவரிடத்தே தோன்றும் உள்ள நிகழ்ச்சி தான் அன்பு எனப்படும். நந்தனுர் சேரிப்பறையரான உறவினரிடத்து உடம்பினுலே தமக்கு ஏற்பட்டிருந்த தொடர்ச்சி கருதி, ஒருவகையில் அன்பு செய்தாரென்பது உண்மையே. எனினும், சிவபெருமானே தமக்கு உறவினர்களைக் காட்டிலும் மிக இனியராவரெனக் கொண்டு நந்தனுர் அப்பெருமானையே விரும்பி, அவரிடத்து இடையருத மெய்யன்பு செய்தார். அவர், உள்ளத்தைச் சிவபெருமானுக்கும், உடம்பைத் தமது ஆண்டையின் பணிகளுக்கும் உரிமையாக்கினர். இவ்விதமாக அவர் உலகத்தோடு ஒட்டியும் ஒட்டாமலும் வாழலானுர்.

நந்தனுர் கூப்பிய கையுடன் அடிக்கடி 'சிவ சிவ' என்றும், 'சங்கரா, மகாதேவா' என்றும், சிவ நாமாவளிகளை ஒருமையுள்ளத்தோடு உச்சரிப்பார். இறைவனது எல்லையற்ற சக்தியையும் அன்பு தொடக்கமான குணங்களையும் இந்த நாமாவளிகள் அவருக்கு நினைப்பூட்டின. அவர் விபூதி உருத்திராட்சங்களாகிய சிவ சின்னங்களை அணிந்து மகிழ்வார். இறைவனுக்கும் தமக்கும் இருந்த நெருங்கிய தொடர்பினை இத்தகைய சின்னங்கள் அவருக்கு நினைப்பூட்டின. தமது நெற்றியில்

விபூதியைப் பூசிக்கொள்ளும்போது அவர், 'இந்த விபூதியைப் போல் என் உள்ளமும் புனிதமாக இருக்கின்றது' என்று தியானம் செய்வார்.

அன்றியும் அவர் பல கோயில்களுக்கும் பேரிகை மிருதங்கம் முதலிய கருவிகளுக்குத் தோலும் வாரும் கொடுப்பார்; வீணைக்கும் யாழுக்கும் இசைவுபட்ட நரம்புகளைக் கொடுப்பார்; சிவ பெருமானுக்குரிய பூசைக்கு ஆர்வத்தோடு கோரோசனை கொடுப்பார்.

"வாரிருக்குது தோலிருக்குது வாங்கிக்கொள்ளுவீரே!" என்றும், "சிறியவன், சாதியொன்றும் அறியாதவன், நான் ஏழை—சிவபெருமானுக்கு அடியேன் செய்யும் பணிவிடை இது!" என்றும், சிவஸ்தலங்கள் தோறும் போய்க் கூவுவார். இது வன்றி, ஆலயங்களின் திருவாசற்புறத்தே நின்று, மெய்யன்பின் மிகுதியால் ஆனந்தக் கூத்தாடுவார்; அவ்வியல்பிற் பாடுவார்.

திடீரென்று தண்டம் போல் விழுந்துருண்டு புழுதியில் புரண்டு கொண்டிருப்பார். எழுந்து நின்று மயிர் சிலிர்ப்பக் கண்ணீர் உகுப்பார். "அன்பே! என் அன்பே! என் இன்பமே!" என்று அழைத்து அழைத்து அறிவழிய வாய் குழறி உரை தடுமாறி ஒரு தரம் அழுவார்; ஒருதரம் தொ

மூவார்; ஒரு தரம் சிரிப்பார். உலகை மறந்து, தம்மை இழந்து அனல் கண்ட மெழுகுபோல் உருகுவார்; ஆனந்த வெள்ளத்தே ஆழ்ந்து கிடப்பார். மீண்டும் அவர் வாய் திறந்து, 'அம்மையே! அப்பா!' என்று ஆசையோடு பேசுவார்; கைகொட்டி ஆரவாரம் செய்து கூத்தாடுவார். அலையடித்தோய்ந்த கடல்போல், ஓசைதெரியாமல், நிறைந்த காதலில் தம்மை அறவே மறந்திருப்பார். ஒரு முகூர்த்தம் சித்திரத்தில் எழுதிவைத்த பதுமைபோல் கண்ணிமையாமல், வாயசையாமல், காலெழாமல், 'இட்டகால் இட்ட கைகளா'கத் தம்வசம் அழிந்திருப்பார். அப்பால் நினைவு வந்து பரவசம் தெளிய, விம்மி நாத் தழுதழுக்க நாதனைப் புகழ்ந்து பணிந்து, மயிர்க்கால் தோறும் திவலையுண்டாகப் புளகம் கொண்டு ஆனந்த அருவி பொழிந்து, தம்மால் இயன்ற பணிகளையெல்லாம் செய்து, ஆதனூருக்கு மீள்வார்.

நந்தனாரது சித்தத்தில் பெருகிய பக்தி வெள்ளம், கரைபுரண்டோடியது. தமக்குப் பேரின்பம் காட்டிய பரம் பொருளை, அவர் தமது சேரிப் பறையர்களான உறவினரோடு பங்கிட்டுக்கொள்ள முயன்றார். தமது தாகத்தைத் தீர்த்த பக்தி வெள்ளத்தில், அப்புலையர்கள், தங்கள் தாகத்தையும்

தாபத்தையும் போக்கிக் கொள்ளுதல் கூடுமென்று அவர் நம்பினுர்.

சேரிப் பறையருள் இயற்கை நுண்ணறிவு வாய்ந்த சிலரை அழைத்து நந்தனுர், பக்தியின் பொருளையும் பயனையும் அவர்களது மனத்தில் பசுமரத்தாணிபோல்பதியுமாறு பலதிருஷ்டாந்தங் களோடும் கதைகளோடும் எடுத்துரைத்தார். பரம் பொருள் ஒன்று உண்டென்றும், அப் பரம்பொரு ளையே பெரியோர் பதியாகிய பரசிவன் என்று வழி படுவரென்றும், அப்பதியானவர் அம்மையப்பனுக விளங்குவதால் அவரை அறிஞர், 'மாதொருபாக னுர்' என்று போற்றுகின்றன ரென்றும், எச்சம யத்தவர் எத்தெய்வத்தைக் கொண்டு வழிபாடு செய் தாலும் மாதொரு பாகனுரே அத் தெய்வமாகி ஆங்கே வருவரென்றும், பலவகைச் சமயத்தோர்க் கும் அவ்வவர் பொருளாய் அமைந்து அருள்புரி யும் சிவம் அன்பின் முதிர்ச்சியிலேயே விளங்கும் என்றும் கூறினுர்.

பிறகு அவர் அன்பு நெறியாகிய பக்தி மார்க் கத்தின் அருமை பெருமைகளை விரிவாக எடுத்துக் காட்டினுர். இத்துணைப் பெருஞ் சிறப்பினதாகிய அன்பின் மாட்சியால் கற்றல் கேட்டல் சிறிதும் இல்லா வேட்டுவச் சாதியினரான கண்ணப்பரும்

உயர்வொப்பின்றி விளங்கிய உத்தம பக்தமணியா கப் பரிணமித்தாரென்று கூறினர்.

அப்பால் பக்தி மார்க்கத்தின் பல வேறு படி களை எடுத்துக் காட்டினர். வெய்யிலின்மீது இரு ந்து வெதும்பும் அரக்கைப்போலிருப்பது பக்தி யின் தாழ்ந்தபடியாகும்; இத்தகைய அற்ப அன்பு மில்லாதவர் இரக்கமிலா அரக்கரேயாவர். வெய் யிலுக்கு எதிர்ப்படுமுன் உருகும் மெழுகுபோல் உருகுவோர், சாதாரணமான மந்த பக்தராவர். சூட்டுக்கு இளகும் நெய்போல் இளகும் நன் னெஞ்சினரே தீவிர பக்தராவர். சிறிதும் இடை யருது ஒழுகும் தைலதாரைபோல், காதலாகிக் கசிந்து கசிந்து, ஆவியோடாக்கை ஆனந்தமா யுருகும் அன்புருவமாகவே அமைந்து ஒழுகு வோர், அதி தீவிர பக்த மணிகளாவர். இந்நிலை யில் இவர்கள் சிவபோதம் பெறுவர். இவர்களது செயலெல்லாம் சிவன் செயலேயாம். இவர்களுக்கு இறைவன் மாட்டுள்ள இறவாத அன்பே, அந்த மில் இன்பமாகிய பேரின்பமாகும். இத்தகைய 'இற வாத இன்ப அன்பே' பக்தி மார்க்கத்தின் தனிப் பெரும் பயன். இவ்விதமான கருத்துக்களை அப் புலையர்களுக்கு எளிதில் விளங்குமாறு வெள்ளைச் சொற்களாலும் விநோதமான கதைகளாலும்

திருஷ்டாந்தங்களாலும் கூறிய பின், நந்தனர் பக்தியின் உயிர் நிலையான ஒழுக்கத்தின் அவசியத்தை வற்புறுத்தலுற்றுர்.

கொலை களவு காமம் கள்ளுண்டல் முதலிய பாவங்களே மக்களை உண்மையில் தீண்டத்தகாத பாவிகளாக்குகின்றன. இப்பாவங்கள் எத்தகைய நுண்ணறிவையும் கெடுத்துவிடும். இவற்றுள் விசேஷமாகக் கள்ளும் காமமுமே கொலை களவு முதலிய பலவேறு பாவங்களுக்குக் காரணமாக உள்ளன.

தன்னை உண்பவரது உணர்வை உண்ணும் கள்ளும், தன்னை உள்ளத்திற் கொள்வோரது உயிரை உண்ணும் காமமும், மகாபாதகங்களுக் கெல்லாம் மூலமாகக் காணப்படுகின்றன. கள்ளும் காமமும், கல்வியறி வொழுக்கங்களால் பண்பட்ட நெஞ்சையும் பாவ நெஞ்சமாக்கிவிடும். இவை குலத்தை அழிக்கும்; குணத்தை அழிக்கும்; ஒழுக்கத்தை ஒழித்து விடும்; பழிபாவங்களை யெல்லாம் விளைக்கும்; இம்மையிலேயே மக்களை நரகத்தில் வீழ்த்தி வருத்தும்; சன்மார்க்க நாசத்தின் மூல காரணமான கள்ளும் காமமும் அடியோடு ஒழிக்கப் பெறுதல் வேண்டும். இவ்வாறு நந்தனர் ஞான மழை பொழிந்தார்.

இவரது உபதேசத்தால் சேரிப் பறையருள் பதினெருவர், தமது பழைய பழக்க வழக்கங்களை ஒழித்து மெய்யன்பராயினர்.

---

## நான்காம் அத்தியாயம்

### திருப்புன்கூர் யாத்திரை

"அன்பர்களே! திருப்புன்கூரில் கோயில் கொண்டிருக்கும் சிவலோக நாதனைக் கண்டு சேவித்து வருவோம். இறைவனை வழிபடுவதும், அடியார் களுக்குப் பணிசெய்து கிடப்பதும், நமது உள்ளத் தில் பாவம் குடிபுகுந்து இடம் பெருதபடி செய்யும் சாதனங்களாகும். பேரின்பத்தை மறந்து சிற்றின் பச் சேற்றில் மூழ்கி, நண்டு நத்தைகளைப் போல வாழ்வது, பகுத்தறிவு பெற்றுள்ள மக்களுக்கு அழகாகுமோ? நண்பர்களே! பாருங்கள். இறை வன் நமக்கு மனித ஜன்மம் கொடுத்திருக்கிருர்; நாம் மிருகம்போல் வாழ்கிருேம். அன்பு செய்ய நெஞ்சும் பணி செய்யக் கைகால்களும் தந்திருக்கி ருர். நாம் வீண்பொழுது போக்குகிருேம். திருப் புன்கூர்ச் சிவலோகன் சேவடிகளை வணங்கி, அவ் வூரில் விருப்போடு பணிசெய்வோம், வாருங்கள்" என்று நந்தனர் ஒரு நாள் சேரிப் பறையரை அழைத்தார்.

அவ்வாறு செய்வது தங்கள் சாதி நெறிக்கு இசையாது என்றும், உயர் குலத்தார் செய்யும் வழிபாடுகளைப் பறையர்கள் செய்வது பாவமாகு மென்றும் அவர்கள் நினைத்தார்கள். நந்தனர் எவ்வளவோ வருந்தியழைத்தும், பறையர்களில் பலரும் இணங்கவில்லை. எனினும் நந்தனரது உபதேசத்தால் மனம் திருந்தப் பெற்றிருந்த பதினெருவரும் வேறு சிலரும் சேரியை நீங்கி இவரோடு புறப்பட்டார்கள்.

திருப்புன்கூருக்குப் பயணமான பறையர்கள், சிவலோக நாதனைச் சேவிக்க வெறுங்கையோடு போகலாகாதென்று வாரும் தோலும் நரம்புகளும் கொண்டு, 'சேரியிலுள்ள சீரிது!' என்று நந்தனரிடம் கூறினர்கள். "இராமன் அணை கட்டுகையில் குரங்குகள் மலைகளைத் தூக்கிக் கொடுத்து உதவி செய்தன. இதைப் பார்த்துக் கொண்டிருந்த அணில்களோ, கடலிற் குளித்து மணலிற் புரண்டு வெய்யிலிற் காய்ந்து அம்மணலை உதிர்த்து, அணை கட்டும் முயற்சியில் இராமனுக்கு உதவின. குரங்கு செய்த பணிதான் பணியென்று இராமன் மதித்தனனு? அணில் செய்த பணியை அங்கீகரிக்கவில்லையா? பணி ஆற்றுவதில், அப்பணியைத் தூண்டும் உள்ளமே முக்கியமானது. பணியின்

சிறப்பெல்லாம் அதற்குக் காரணமான மெய்யன்பின் சிறப்பே" என்று நந்தனர் சொல்லி அவர்களுக்கு ஆறுதல் அளித்தார்.

பிறகு அவர், வந்த புலையர்களை நோக்கி, 'உங்களுக்குப் பக்தி பெருக வேண்டும்; நீங்கள் இத்தூய வெண்ணீறுபோல் உள்ளும் புறமும் ஒத்த புனித வாழ்வு வாழ்வீர்கள்!' என்று ஆசீர்வதித்து, அவர்களுக்கு நெற்றியில் நீறிட்டார். அவர்கள், 'சத்தியந்தா'னென்று, நந்தனரை அடிவீழ்ந்து வணங்கினர்கள்.

தவமுனிபோல் நின்ற நந்தனர் சந்தோஷங் கொண்டு கோரோசனைப் பையை எடுத்துத் தாராளமாக வாரிக் கொடுத்தார். அனைவரும் அங்கங் குளிர்ந்து இறைவனது திருப்பெயரை அமைத்துச் சிங்காரமான 'பள்ளு'ப் பாடினர். அவர்கள் ஒரு முகமாக ஒரே குரலில் ஆனந்தமாகப் பாடிக் கொண்டே வழியின் சிரமத்தை உணராது சென்றார்கள். திருப்புன்கூர் வந்து சேர்ந்ததும், அப் புலையர்கள் அளவிலாத ஆனந்தம் அடைந்தார்கள்.

புலையர்கள் திருப்புன்கூர் ஈசனைப் பாடிக்கொண்டு, ஊருக்குள் பிரவேசிக்கலாகாதே என்ற வருத்தத்தோடு வெளியே ஊரைச் சுற்றி வலமாக வந்

தார்கள். அப்பொழுது நம்பிக்கையின் விசித்திர சக்தியால் அவர்கள் புதிய பலம் பெற்றவர்களைப் போல் ஒருணர்வு கொண்டு பேருவகையெய்தி ஆனந்தக்கண்ணீர் சொரிந்தார்கள். மண்ணுலகிலிருந்து கூட்டோடு விண்ணுலகம் அடைந்து அவ்வுலகில் ஆனந்த சுதந்திரத்தோடு பறந்து திரிவதைப்போலவே, அவர்கள் திருப்புன்கூர் என்னும் தலத்தைச் சுற்றி வந்துகொண்டிருந்தார்கள். முடிவில், சிவலோகநாதனது சந்நிதிக்கு எதிரே வெகுதூரத்தில் நின்றுகொண்டு, ஒரே குரலில்,

"எங்கள் குலம் சுத்தமாச்சு !
மலம் வெந்து போச்சு!
நலம் கண்டோம் !"

என்று உற்சாகமாக உரக்கக் கூவினார்கள்.

நந்தனார் சிவலோக நாதனுக்குரிய சிறப்புமிக்க புகழை நினைத்து நினைத்து உளம் உருகித் துதி செய்து கொண்டிருந்தார். "இறைவா! உமது வரம்பிலாற்றலை என்னென்று புகழ்வது! சிரித்துப் புரமெரித்த உமது சேவகத்தைப் பௌராணிகர்கள் எத்தனை அழகிய கற்பனைகளால் புகழ்ந்து புகழ்ந்து பேசுகிறார்கள்! அம்மையப்பனாகி மக்களை வாழ்வித்தருளும் உமது பெருங் கருணையையும் பேராற்றலையும் எண்ணிறந்த கதைகளாலும் கற்

பனைகளாலும் அளந்துரைத்தல் கூடுமோ? என்னில் எண்ணெய்போல், பாலில் வெண்ணெய்போல், மலரில் மணம் போல்,மணியில் ஒளிபோல், பார்க்குமிட மெல்லாம் நீக்கமற நிறைந்து நிற்கும் சிவலோகனுகிய உம்மை 'இவ்விடத்தில் காண்போம்! அவ்விடத்தில் காண்போம்!' என்று கருதி அலைந்து திரிகிருேம். அன்பால் நினையும் நெஞ்சிலே வளரும் ஜோதியே! எளியேனும் காணத்தரிசனம் தந்தருள்வீர்!" என்று இவ்வாறு தோத்திரஞ் செய்து கொண்டே சந்நிதியை நோக்கி நின்ருர்.

அத்தலத்தில் நந்திமிகவும் பெரிதாக இருந்ததால், நந்தனர் தூரத்தே திருவாயிலுக்கு எதிர் நின்று சுவாமி தரிசனம்செய்வதற்கு அது இடையூருக அமைந்தது. இதனல் இறைவனை நேரே கும்பிடப் பெருத நந்தனர் திடுக்கிட்டு இதயத்திலுள்ள இன்பத்தையும் மகிழ்ச்சியையும் இழந்து, 'என்ன வினை செய்தேனே? கண் பெற்ற பாவந்தானே!' என்று இரங்கி யேங்கினர்.

அப்பொழுது பறையர்களெல்லாரும் தமக்குத் தரிசனம் நேரிடவில்லையே என்னும் வருத்தத்தை விளக்கும் காதலோடு, 'நாம் என்ன செய்வோம்? வழிமறைத்திருக்குதே! மலைபோலே ஒரு

மாடு படுத்திருக்குதே!' என்று கலங்கிக் கதறினார்கள்.

பிறகு நந்தனார் தம்மைமறந்த நிலையில் பெருங் காதலோடு, "ஐயோ! அங்கே நின்று ஓரடி விலகினால் போதுமே! உற்றுப் பார்க்கச் சற்றே விலகாதோ?" என்று வருந்திக் கூவினார். சுவாமி அவ்வாறே அருள் செய்வாராய், நந்தனார் மீது இரக்கங் கொண்டு, தமக்கு முன் உள்ள இடபதேவரை நோக்கி, "சற்றே விலகியிரும் பிள்ளாய்! சந்நிதியை மறைத்திருக்கிறாயாம். ஒரு நாளும் வாராத பக்தன் வந்திருக்கிறான்; நீ ஒதுங்காமலிருந்தது குற்றம்! அவன் தன்னை நொந்துகொள்ளுகிறான். பூதலத்தில் பக்திக்கரை கண்ட இவனைப் போன்ற புண்ணிய புருஷன் வேறொருவனுமில்லை" என்று அருளினார்.

இறைவனது திருவுளங் கண்ட இடப தேவரும், நந்தனே நல்ல பக்தனென்று தெளிந்து வெட்கங் கொண்டு விலகியிருந்தார். இறைவன் பின்னும் நந்தியை நோக்கி, "எதையும் பொறுப்பேன், எதையும் கொடுப்பேன். பக்தனுக்குக்குற்றம் செய்தால்மாத்திரம் அதைப் பொறுக்கமாட்டேன்" என்று இவ்வாறு பக்தரது அருமை பெருமைகளை உபதேசஞ் செய்தார்.

நந்தனுர் தம் பொருட்டு நிகழ்ந்த அற்புதத்தைக் கண்ணுற்றதும், சிந்தை குளிர்ந்து அளவில்லாத ஆனந்தமடைந்து குதித்தார், துதித்தார், கொக்கரித்தார், கைகொட்டினுர், கண்ணீர் வடித்தார், ஒரு தரம் துடித்தார். மீண்டும் உளம் களித்தார். எங்கும் சிவமாகவே பாவித் திறைஞ்சினுர். பிறகு வாய்விட்டு உச்ச ஸ்வரத்தில் உற்சாகமாகப் பள்ளுப்பாடித்தார்; அப்பால் தோள்தட்டி ஆரவாரஞ் செய்து கூத்தாடினுர். மட்டுப்படாத மகிழ்ச்சி கொண்டு, தன் தெய்வத்தோடு நேரே பேசுவது போலத் தான் பட்ட பாடுகளைப் பேசினுர்.

இவ்வாறு தரிசனஞ் செய்த நந்தனுர், "அம்பலவாணரே! அடைக்கலமென்று நம்பி வந்தேன்; ஆதரிப்பது உமது பாரம்! தாயும் நீர்! தந்தையும் நீர்! ஏழையேனுக்கு உம்மைத்தவிர வேறு ஒருவருமில்லை" என்று பிரார்த்தனை செய்து கொண்டு பணிவிடை செலுத்தினுர்.

பிறகு நந்தனுர் ஒரு சோலையை அடைந்து அதன் அழகினை வியந்து, அங்கே ஒரு குளம் வெட்ட வேண்டுமென்று ஆசை கொண்டார். உடனே சிவலோக நாதனது திருவருளை முன்னிட்டு, விரிவான ஒரு குளத்துக்குரிய அளவினைக் கணக்கிட்டறிந்து நந்தனுரும் அவருடைய தோ

ழர்களும் தாம் விரும்பியவாறு குளம் வெட்டத் தொடங்கினார்கள்.

இவர்கள் குளம் வெட்டிக் கொண்டிருக்கையில், வேலை செய்வதற்கு இன்னும் அதிகமாக ஆள் வேண்டுமென்று நந்தனார் நினைத்தார். அப்பொழுது அவ்விடத்திற்கு ஒரு மனிதன் வந்தான்.

அவன் வினோத முகமும் பெருவயிறும் சப்பைக் காலுமுள்ளவனாகக் காணப்பட்டான்.

நந்தனார், "நீ யாரப்பா?" என்று பரிவோடு கேட்டார். வந்த மனிதன் விகடமாக, நான் உன் ஆள் அப்பா! என்று விடை கூறினான்.

நந்தனார், 'நாங்கள் இங்கே குளம் வெட்டுகிறோம்' என்றார். அம்மனிதன் இளநகை யரும்பி, 'வெட்டுவது வெகு புண்ணியம்' என்றான்.

நந்தனார், 'எங்களுக்கு உதவி செய்ய ஆள் வேண்டும்' என்றார். அம்மனிதன், 'நானும் உங்களோடு வெட்டுவேன்' என்றான்.

நந்தனார், 'அற்பமாகப் பதக்கு நெல்லைத்தான் நாங்கள் கூலியாகக் கொடுத்தல் கூடும்' என்று வருந்தினார். 'அப்பனே, அது போதும், போதும்!' என்று அம்மனிதன் இசைந்தான்.

அம்மனிதனுடைய தோற்றமும் குணமும் நந்தனாருள்ளத்தில் வியப்பையும் மகிழ்ச்சியையும்

ஒருங்கே தோற்றுவித்தன. அவர்கள் அனைவரும் ஒரு மனத்தோடு அல்லும் பகலும் உழைத்து வந்தார்கள். புதிய மனிதன் அநாயாசமாகப் பல மனிதர் செய்யும் வேலைகளையும் சொற்ப நேரத்தில் செய்வதைக் கண்ட நந்தனாரது ஆச்சரியம் அதிகரித்தது.

முடிவில் அச் சோலையிலே அழகிய தடாகமொன்று நிர்மாணமாயிற்று. அத் தடாகத்தில் செந்தாமரைகள் மலர்ந்திலங்கின. பன்னிற மீன்கள் துள்ளிக் குதித்தன. அழகான பறவைகள், அங்கு மிங்கும் பறந்து திரிந்து கொண்டிருந்தன. பகலில் சூரியனது தூய ஒளியும் இரவில் சந்திரன் பொழியும் தண்ணிலவும் சுகமாக விழும்படி அத் தடாகம் அமைந்து விளங்கியது.

தடாகத்தில் மக்கள் நீராடி நிர்மலராக அமர்ந்து ஜபம் செய்வதற்குரிய படிகளும் மண்டபங்களும் அமைக்கப்பட்டன. கரையிலுள்ள தேவதாரு முதலிய மரங்கள் நீராடுவோர்க்கு நிழல் செய்தன. சோலையிலுள்ள மல்லிகை முல்லை முதலிய மலர்களின் நறுமணத்தோடு வீசும் காற்று, இனிமையாக வீசிக் கொண்டிருந்தது. வாழை பலா மா கமுகு சந்தனம் முதலான விருட்சங்களும் செடிகளும் கொடிகளும் நிறைந்திருந்த சோலையிலுள்ள

மான்கள் துள்ளியோடுவதும் மயில்கள் ஆசை யாகத் தோகை விரித்து அழகுற நடிப்பதும், அத் தடாகத்தின் காட்சியின்பத்தை அதிகரிக்கச் செய்தன.

தடாகவேலை முற்றுப்பெற்ற பின், தங்களுக்கு அவ்வேலையில் அருந்துணையாக அமைந்து உத விய அந்நியனை நந்தனார் காணவில்லை. திருப்புன் கூர் எங்கும் விசாரித்துப் பார்த்தும், அம்மனித னைக் குறித்து ஒரு செய்தியும் கிடைக்கவில்லை. அம்மனிதனது முகத்தையும் வயிற்றையும் காலை யும் நினைத்துப் பார்த்தால், பிள்ளையாரே அவ்வுரு வாகி வந்தாரென்று புலையர்கள் ஊகித்தனர்.

நந்தனார், 'இதுவும் சிவன் செயலே' என்று தெளிந்து, முன்போலவே திருப்புன்கூர்க் கோ யிலை வலமாக வந்து வணங்கி யெழுந்து சிவலோக நாதனிடம் விடைகொண்டு தமது தோழர்களோடு மீண்டு ஆதனூர் வந்து சேர்ந்தார்கள்.

---

## ஐந்தாம் அத்தியாயம்

### "நாளைப் போவேன்"

நந்தனார், சிவபெருமான் வீற்றிருந்தருளும் பல திருப்பதிகளிலும் போய் வணங்கி, அப்பதிக

ளில் பல தொண்டுகளைச் செய்தார். அவருடைய பக்தி நாளடைவில் முறுகி முதிர்ந்து வளர்ந்தோங்கியது.

இவ்வாறு இருக்கையில் ஒரு நாள் நந்தனர் பௌராணிகர் ஒருவர் ஓர் உபந்நியாசம் செய்து கொண்டிருந்ததைச் சற்று தூரத்தில் நின்று கேட்டார். பௌராணிகர் சிதம்பர ஸ்தலத்தின் மகிமையை எடுத்துக் கூறினர். சிதம்பரத்தில் நிருத்தம் செய்யும் சிவம் அனந்த ரூபமுடையது; அம்மையப்பராகவும் சமஸ்த சாட்சியாகவும் பரமேசுவராகவும் காட்சி தருகிறது. இப்பரமேசுவரரே பிரமா; இவரே விஷ்ணு; இவரே எல்லாம் ஆனவர்; என்றும் உள்ளவர். இவரையே நடராஜா என்று பிரசித்தமாக வழிபடுகிருர்கள். நடராஜ தரிசனமே சகலவிதமான பாவங்களுக்கும் ஓர் அருமருந்து. இவ்விதமாகப் பௌராணிகர் பிரசங்கித்தது நந்தனர் உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்தது.

இப் பிரசங்கத்தைக் கேட்ட பின் நந்தனர் தமது சேரிக்குத் திரும்பி வருகையில், சில அடியார்கள், ‘சிவ சிதம்பரம்!, தில்லையம்பலம்!’ என்று கூறிக்கொண்டு சென்றதைப் பார்த்தார். நந்தனர் அக்கூட்டத்தினரை வணங்கி அவர்களிடம் சிதம்பர மகிமையைக் குறித்தும் நடராஜ தரிசனத்தின்

விசேஷங்களைக் குறித்தும் பல கேள்விகள் கேட்டார். அவர்கள் தக்கவாறு பதில் கூறிய பின், 'நாங்கள் நாளையே நடராஜ தரிசனம் செய்வோம்!' என்று சொன்னார்கள். அப்பொழுதே நந்தனார் உள்ளமும் சிதம்பர தரிசனத்தில் ஈடுபட்டது.

அவர் அடிக்கடி 'சிதம்பரம்! திருச்சிற்றம்பலம்!' என்று சொல்லத் தொடங்கினார். பல ஸ்தலங்களுக்கும் போய் வணங்கிப் பணி செய்தலையே தொழிலாகக் கொண்டிருந்த நந்தனாருக்குச் சிவஸ்தலங்கள் எல்லாவற்றுள்ளும் மேலான ஸ்தலமாகிய சிதம்பரத்தில் சபாநாயகர் செய்தருளும் ஆனந்தக்கூத்தைத் தரிசித்தல்வேண்டும் என்னும் ஆசை அதிகரித்தது.

இந்த ஆசை, உள்ளத்தில் உதித்த தினத்திலேயே, அற்புதமாக முதிர்ந்து, குளம் விட்டு அகலாத தெப்பம் போல் நந்தனார் உள்ளத்தில் ஓயாது ஒழியாது சுற்றிச் சுழன்று கொண்டே இருந்தது இவ்வாறு தம்மை நீங்காது வந்துதித்த ஆசையின் மிகுதியால், நந்தனார் அன்றிரவு கண் துயிலவே இல்லை. பொழுது புலர்ந்ததற்பின் அத்திருப்பதிக்குப் பிரயாணமாகலாமென்று கருதியிருந்தார்.

மற்ற நாள் விடிந்த பின்பு, அவர் தாம் தில்லைக்குச் செல்லில், அத்திருப்பதியின் கோயிலினுள்

ளே புகுந்து தரிசித்தல் தமக்கு இசையாதே என் பதை நினைந்து வருந்தினர். பிறகு இவ்வாறு போகக் கூடாமையும் எம்பெருமான் திருவருளே என்று நினைந்து போகா தொழிந்தார் எனினும், சிதம்பரம் சென்று இறைஞ்சுதற்கு ஏதுவாகிய காதலுணர்வு ஒரு சிறிதும் குன்ருது மேன்மே லும் வளர்ந்து கொண்டே யிருந்தது. உள்ளத்தே எழும் காதல் நன்கு மேம்படுங்கால், அவர் கோ யில் பிரவேசம் தமக்குக் கிடையா தென்பதையும் மறந்து, 'எப்படியாவது சிதம்பரம் சென்று சேவித்தே தீரவேண்டும்; அதற்கு நாளையே புறப்பட வேண்டும்!' என்று தீர்மானம் செய்து கொள்வார்.

இவ்வாறு நந்தனர் 'நாளைப் போவேன்! 'நாளைப்போவேன்!' என்று சொல்லி நாட்கள் பல கழித்தார். இக்காரணத்தினலே இவர் திருநாளைப் போவார் என்னும் பெயர் பெற்ருர். இத்தகைய பெருங் காதலில் ஊண் உறக்கம் முதலான சாமான்ய உலக விஷயங்களை மறக்கலுற்ருர்.

"நான் சிதம்பரம் போவேன்! நாளைச் சிதம் பரம் போவேன்! உலகம் புகழும் தில்லையை நாடித் தேறித் தெளிவேன். ஆ! ஆ! என்ன ஆச் சரியம்! 'சிதம்பரம்' என்று ஒருதரம் சொன்ன

லும், என் உள்ளத்தில் இன்பம் ஊறிப் பெருகு கிறதே!" என்று ஒருகால் எண்ண மிடுவார்.

ஒருகால் "பாவியேனுக்கும் சிதம்பர தரிச னம் உண்டோ? இது முடவன் கொம்புத்தேனில் இச்சை வைத்த கதையாக முடியுமோ?" என்று ஏங்குவார், உடனே, தமக்கும் 'இறைவன் அருள் புரிவான்!' என்னும் நம்பிக்கையோடு பிரார்த்தனை கள் செய்வார்.

முடிவில் நந்தனார் சேரியிலுள்ள தம் இனத் தாரை அழைத்துத் தமது நிலையை வெளியிட விரும்பினார்.

---

## ஆறாம் அத்தியாயம்

### சேரியில் பக்தி வெள்ளம்

நந்தனார் புலையரை நோக்கி, "எல்லோரும் வாருங்கள்! பக்தியிலே சுகமிருக்கிறது, பாருங்கள்! இறைவனை நினையாமல் காலத்தை வீணாகப் போக் குவது நன்றாகுமோ? மூடன் வீணாகப் பொழுது போக்கிக் காலத்தைக் கொல்ல முயல்கிறான் ஆனால் உண்மையில் காலமே அவனைக் கொன்று விடுகிறது. துன்பமயமான இவ்வாழ்க்கையில் பக் தியே பரமானந்த வெள்ளமாகும். இவ்வெள்ளத்

தில் மூழ்கி வாழ்வதே இன்பவாழ்வு!'' என்று கூறி ஒரு தரம் இப்பொழுது 'தில்லைச் சிற்றம்பலம்' என்று சொல்லுங்கள் என்று வேண்டினர்.

சிறுவர் சிறுமியர்க் கெல்லாம் அவ்வாறு சொல்லப் பழகுவது ஒரு விளையாட்டாகவிருந்தது. ஆரம்பத்தில் அவர்கள், 'தில்லைச் சிற்றம்பலம்' என்று உச்சரிக்க இயலாத நிலையில் திகைத்து நின்று ஒருவரை யொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் விரை விலே நந்தனர் சொன்னபடி சொல்லப்பழகிக் கொண்டார்கள். நந்தனர் நல்லவரென்றும் சூது வாதறியாத சுத்தரென்றும் கோதிலாத குணக் கட லென்றும் பெயர் பெற்றிருந்ததோடு, சேரி யிலுள்ள இளைஞர்களால் பெரிதும் காதலிக்கப் பெற்றிருந்தார். எனவே, அவர்கள் அவரது சொல்லை உறுதியென்று கொண்டு, 'தில்லைச் சிற் றம்பலம்' என்று கூவிக் கூத்தாடினர்கள்.

நந்தனர் மகிழ்வெய்தி, ஆண்டில் முதிர்ந்த புலையர்களை 'இப்படி வாருங்கள்' என்று அழைத் தார். அவர்களில் பலர்க்கும் நந்தனரது நிலை பரிதாபத்திற்கும் பரிகாசத்திற்குமே உரியதாகத் தோற்றியது. அவர்கள் இவரது அழைப்பிற் கிணங்கிவர மறுத்து, 'இவருக்கு வேறு வேலையில்


SEKAR.

லேயா? பக்தியென்றும், சிற்றம்பலம் என்றும் பிதற்றிக்கொண்டிருக்கிறார்' என்று வெறுத்துரைத்தார்கள். நந்தனார் நல்ல வார்த்தை சொல்லி அவர்களை நோக்கி, 'சேரியிலுள்ள பெரியோர்களே!' என்று பேரன்போடு அழைத்து, 'உங்களை வணங்கிக் கும்பிடுகிறேன்; இறைவனது திருநாமத்தை எங்களோடு சேர்ந்து ஒருதரம் சொல்லலாகாதா?' என்று கருணை தோய்ந்த குரலில் வேண்டினார். அவர்கள் சிறிதுநேரம் விடை கூறாது பிரமித்து மௌனமாயிருந்தனர். பிறகு அவர்களுக்குள் பின் வரும் ருசிகரமான வாக்குவாதம் நடைபெற்றது.

நந்தனார்:—தில்லையம்பலம் என்று சொல்லச் சொன்னார்.

புலையர்:—கள்ளப் பேச்சென்று மெள்ளச் சொன்னார்.

நந்தனார்:-சேரியில் நல்ல காரியம் இது என்றார்.

புலையர்:—ஏரியில் நல்ல மாரி யுண்டென்றார்.

நந்தனார்:—விட்ட நாள் நினையாமல், எட்டு நாள் மறவாமல், நிஷ்டை பண்ணுத ஜன்மம் நஷ்டம் என்றார்.

புலையர்:—விட்ட விதை முளையாமல், நட்ட பயிர் விளையாமல், கெட்டதானல் கிராமம் நஷ்டமென்றார்.

நந்தனார்:—உங்கள் புலைத்தன்மை போகுமென்றார்.

புலையர்:—எங்களைக் கெடுத்தாயே பாவி என்றார்.

நந்தனார்:—தேவாதி தேவனைத் தெரிசிப்பீர் என்றார்.

புலையர்:—பாவாடை ராயனைப் பணிந்து வா என்றார்.

நந்தனார்:—அனைத்தாளு மீசனுக் கன்புசெய் வீரென்றார்.

புலையர்:—இனத்தாரை நொந்தவர்க் கின்பம் ஏதென்றார்.

நந்தனார்:—ஆனால் முறை யிட்டால், அம்பலத்தே கேட்குமென்றார்.

புலையர்:—உழுது பயிரிட்டால், உள்ளபடி விளையுமென்றார்.

நந்தனார்:—சித்தமெல்லாம் அம்பலத்தே சென்று விட்டதென்றார்.

புலையர்:—பக்தியெல்லாம் பாழாகிப் பறந்து போச்சென்றார்.

நந்தனார்:—தாண்டவராயனே தகுந் தெய்வமென்றார்.

புலையர் :—தூண்டி வீரப்பனே தொழுந் தெய்வ மென்றார்.

நந்தனார்:—நலத்தைக் கொடுக்க வந்த நற்குரு வென்றார்.

புலையர்:—குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக் காம்பு என்றார்.

நந்தனார்:—பல வழக்கம் நானறிவேன் பக்தி செய்யு மென்றார்.

புலையர்:—குலவழக்க மறியாத குருடா போ வென்றார்.

பிறகு நந்தனார் சிவனே தெய்வமென்றும், சிதம்பரமே பூலோக கைலாசமென்றும், பக்தியே பெருமையென்றும் தமது சம்பிரதாயத்தை விரிவாக எடுத்துரைத்தார். புலையரோ சேரியே சொர்க்கமென்றும், ஏரியே கைலாசமென்றும், மாரியே தெய்வமென்றும் ஏறுமாறாகப் பேசினர். நந்தனார் 'படிப்பது ஞானம், பார்ப்பது மூலம்' என்று சொன்னபோது அவர்கள் விகடமாக;

பிடிப்பது நண்டு; புசிப்பது இறைச்சி;
குடிப்பது கள்ளு—குலசம்பிரதாயம்."

என்று விடையிறுத்தனர்.

நந்தனர் தம்மா லியன்றவரையில் பக்திநெறி யின் அருமை பெருமைகளை எடுத்துரைத்தார். புலையர்களோ அவரைப் பரிகசித்து,

கையிலே கலயம்; காலிலே சேறு;
பையிலே பாக்கு—பறைச்சம்பிரதாயம்."

என்று உரக்கக் கூவினர்கள்.

பிறகு அப்புலையருள் ஒருவன்,

"பார்ப்பாரத் தெய்வமது பலிக்காது, பறையரைக்
காப்பாற்ற மாட்டாது கைவிடுமென்றான்."

அப்போது நந்தனர் அவனது அறியாமைக்குப் பெரிதும் இரங்கி,

"பார்ப்பார் பறையரென்று பாராது பரிதிபோல்
காப்பாற்று மல்லவோ கண்ணுதலே யென்றார்."

பழைய வழக்கங்களில் அளவு கடந்த பற்றுள்ளங் கொண்ட புலையனொருவன் நந்தனரது கொள்கையைப் புதுமைக் கொள்கையென இகழ்ந்து பேசினன். அப்பொழுது நந்தனர் பழைமையென்று போற்றுவதும் புதுமையென்று இகழ்வதும் தகாதென்று சொல்லி, எப்பொருளை யார் சொன்ன போதிலும் அது எத்தன்மையதாயிருந்த போதிலும் மெய்ப்பொருள் காணமுயல்வதே அறிவுடைமைக்கு அழகாகுமென வற்புறுத்தினர்.

பிறகு நந்தனுர் சிவபக்தியின் பலன்களைக் குறித்த பல கதைகளையும் சேரிப் புலையர்களுக்கு எடுத்துச் சொன்னுர். இனிய குரலில் அவர் பொறுமையாகவும் நயமாகவும் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும், வயது முதிர்ந்த புலையர் பலர்க்கும் அவரது கொள்கைகள் வெறுப்பையே விளைத்தன. எனினும் சேரியில் நந்தனுரது உபதேசத்தின் பயனுக ஒருவாறு நாளடைவில் பக்தி வெள்ளம் பெருகி வந்த தென்பதை அனுபவசாலிகளான புலையர்கள் கண்டு கொண்டார்கள். விசேஷமாக இவரது கொள்கை இளைஞருக்குள் பரவி வந்த தென்பதை அவர்கள் உணர்ந்து, 'அனுபவமற்ற சிறு பிள்ளைகளை நந்தனுர் கெடுத்துவிடுவாரே!' என்று அஞ்சினுர்கள்.

இவ்விதமாக நந்தனுரைக் குறித்தும், சேரி இளைஞர்களைக் குறித்தும் மனவருத்தமும் மனக் கவலையும் கொண்ட புலையர்களில், ஆண்டிலும் அனுபவத்திலும் மூத்து முதிர்ந்த சிலர் ஒரு சிறு கூட்டமாகச் சேர்ந்து தங்களுக்குள் இரகசியமாகக் கலந்து ஆலோசனை செய்து கொண்டு, நந்தனுரை எப்படியாவது பழைய நிலைமைக்குத் திருப்பிவிட வேண்டு மென்றும் அவ்வாறு திருத்த முடியாவிட்டால் அவரை ஊரைவிட்டுத் துரத்திவிட வேண்டு மென்றும் உறுதியாகத் தீர்மானித்தார்கள். பிறகு

அவர்கள் நந்தனாரை ஓர் தனியிடத்தில் சந்தித்து அவரோடு வாதமும் தர்க்கமும் செய்யத் துணிந்தார்கள்.

அவர்களில் ஒரு புலையன் மனக் கடுப்போடு நந்தனாரை நோக்கி, "ஐயா, ஆண்டிகளும் பரதேசிகளும் அரகரா என்று கூச்சலிடக் கேட்டிருக்கிறோம். இப்படிப்பட்ட தெய்வம், கஷ்டப்பட்டு உழைத்து ஜீவனம் செய்யும் நமக்குத் தகுமா? நந்தனாரே! உம்முடைய தெய்வம் ஆண்டிகளின் தெய்வமாக விருப்பதோடு, தானும் ஆண்டியாகவே பிச்சை யெடுத்துண்ணப் புறப்பட்டதாகவும் கேள்விப்பட்டிருக்கிறோம்" என்று சொன்னான். அதற்கு விடையாக நந்தனார், "விருப்பு வெறுப்பில்லாத இறைவன் ஆண்டியாக வேடங்காட்டிய போதிலும் அவரே மூன்று லோகத்திற்கும் இறையாகிய மூர்த்தியாவார்" என்றார்.

இப்பேச்சு வீண்பேச்சென்றும், கடவுளைப் பற்றிப் பேசினால் ஒரு பயனும் விளையப் போவதில்லையென்றும், கருதிய புலையன் ஒருவன்;

"நாற்றைப் பிடுங்கியே நடுகை நட்டால் இந்தச்
சோற்றுக் கவலை விடும் சுகமிது"

என்றான். எப்போதும் அழுமூஞ்சியாக இருந்த புலையனொருவன் நந்தனார் செய்யும் சிவ ஸ்துதி தனக்கு வேதனையாக இருப்பதாயும், அழுகை

விளைவிப்பதாயும் சொன்னான். வேறு சிலரும் நந்தனாரது நிலைமைக்கிரங்கி, அவரது பக்திப் பித்தத்திற்காக வருத்த முற்றார்கள்.

ஆனால் நந்தனார், 'ஐயோ! இவர்கள் அடையாளம் காணாத ஆடுகள்' என்று வருந்தி அழுதார். இந்நிலையில் நந்தனாரைத் திருத்த வேண்டும் அல்லது துரத்தவேண்டும் என்று கருதிவந்த கூட்டம் கலைந்து போயிற்று. சேரியில் இளைஞர்க்குள் மாத்திரம் பக்தியும் நந்தனாரது புதுமைக் கொள்கையும் முன்னிலும் அதிகமாகப் பரவின.

---

## ஏழாம் அத்தியாயம்
### சேரிப் பெருங்கிழவன்

இளைஞருக்குள் பரவி வந்த பக்தி நந்தனார் உள்ளத்திற்கு ஆறுதல் அளித்தது. எனினும், மூத்தவர்களது நடை அவருக்கு மேலும் மேலும் துன்பத்தையே விளைத்தது. வயதில் முதிர்ந்திருந்தும் அவர்கள் அறிவிலாவது பக்தியிலாவது வளர்ச்சி பெறவில்லையென்பதும், உயர்தர வாழ்க்கைக்குரிய அம்சங்களில் கிழவர்களும் குழந்தைகளாகவே இருந்தனரென்பதும் நந்தனாரது மனத்தில் ஆறாத புண்ணை யுண்டாக்கின. சேரியை ஒரு புறம் மூட பக்தியும்; ஒரு புறம் உலகாயதமும் கவர்

ந்து கொண்டிருந்தன என்பதையும் எண்ணியெ ண்ணி அவர் ஏக்கமுற்ருர். தாம் சேரியிலிருப்ப தால் சிலர் அச்சேரியில் ஒற்றுமை குலைந்து செல் வம் குறைந்து வாழ்வு பாழாகுமென்று நம்புகிருர்க ளென்பதையும் அவர் நன்குணர்ந்து கொண்டு சிதம்பர தரிசனத்திற்கு, 'நான் நாளையே போவேன்' என்று தமது தோழர்களிடம் கூறினர்.

உண்மையில், சேரிப் பறையரில் பெரும்பா லார் நந்தனரிடம் அந்தரங்கமான நம்பிக்கையும் நட்பும் உடையவரா யிருந்தார்கள். எனவே அவர் கள் ஓடிவந்து அவரைச் சூழ்ந்துகொண்டு, 'அண் ணே! நீ போகாதே. நமது ஆண்டை பொல்லாத வன்; கோபித்துக் கொள்வான்' என்று நயமும் பயமுமாகச் சொல்லி, அவரைச் சிதம்பரம் போ காது தடுக்க முயன்ருர்கள். நந்தனர் கம்பீரமாக அவர்களை நோக்கி, 'நான் இனி ஆண்டைக்கு அடிமைக்கார னுவேனு? ஆண்டவனுக் கன்றே அடிமைக்கார னுவேன்' என்று சொன்னர்.

மீண்டும் புலைச்சேரியில் ஒரு கூட்டம் கூடி யது. இக்கூட்டத்தில் புலையர் அனைவரும் முதிய ரும் இளைஞரும், ஆணும் பெண்ணும் வந்திருந்த னர். நந்தனரைக் குறித்து அக்கூட்டத்தாருள் பலவகையான வாதங்களும் பிரதிவாதங்களும் நிகழ்ந்தன. முடிவில் சேரிப் பெருங்கிழவன் என்று

பிரசித்தி பெற்றிருந்த மூத்தோனல் நந்தனருக்குப் புத்தி புகட்டுதல் நலமென்று தீர்மானமாயிற்று. இப்பெருங் கிழவன் முதியருள் முதியன்; இவனது வயது இவ்வளவுதானென்று ஆதனூர் வாசிகளால் நிர்ணயித்தல் இயலாததாயிருந்தது. காலங் கண்ட பெருங்கிழவன் இவனேயென்று அயலூர்ப் புலையர்களும் கூறுவதுண்டு. வயது மிகுந்திருந்தும் அவனது உள்ளம் மாத்திரம் ஞாபக சக்தி பிசகாமலிருந்தது.

இப் பெருங் கிழவன் உடல் தளர்ந்து பற்கள் உதிர்ந்து தோல் சுருங்கி நரம்புகள் வெளிப்பட்டுத் தோன்றும் நிலையில் தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்தான். அவனது முதுகு சரிந்து முழுதும் வில்லாக வளைந்திருந்தது. அடிக்கடி நடுங்கிக் கொண்டிருந்த உடம்போடு, அவன் கோலூன்றிக் கூனிக் குறுகிக் கோணலாக நடந்து வந்தான். வந்து தம்மை மறந்து நிஷ்டையிலிருந்த நந்தனரைக் கட்டியணைத்துக் கண்ணீர் சொரிந்து மனங் கனிந்து காதல் மிகுந்து முகம் நோக்கி நிமிர்ந்து பார்த்து, இவர் ஒன்றும் தெரியாத இளங்கன்றென மதித்து, விஷயத்தை விளையாட்டாகவும் வேடிக்கையாகவும் சொல்லத் தொடங்கினன்.

"ஓ! நந்தனரே, நீரே சொல்லும்! இது ஞாயந்தானே? நம் சாதிக்கடுக்குமோ? சேரியிலில்

லாத வழக்கமே நீர் செய்து கொண்டு வந்த பழக்க மாகும். உமது செய்கை ஊரெங்கும் முழங்கு கிறது. உமது ஒழுக்கம் நன்றாயிருக்கிறது! சிதம் பரம் என்னும் பேச்சினால் உமக்கு என்ன பயன் ஏற்படு மென்று நினைக்கிறீர்? சிதம்பரப் பேச்சு காரி யப் பேச்சாகுமா? நீரே சொல்லும்! நந்தனாரே, இப் பேச்சு நமது சாதிக்கு உரிய பேச்சாகுமா? மதம் மத மென்று நீர் சொல்லுவதெல்லாம் உமக்கு மதம் பிடி த்திருக்கிறது என்பதையே காட்டுகிறது. உமது காரி யம் சேரிப் பறையருக்கு மட்டுமோ ஏச்சாக முடிந்தி ருக்கிறது? நமது பூமண்டலத்திலுள்ள பறையர்க ளுக்கெல்லாம் இது ஏச்சாக முடியுமன்றோ? இவ் வாறு செய்வது நியாயமா? நீரேசொல்லும் சிதம்பர தரிசனமும் சிவ பக்தியும் பறையருக்குண்டோ?" என்று சொல்லிக் கொண்டே அவன், "சிறு பயல் களுக்கே உபதேசம் செய்கிறீர்; நீர் பண்ணி வைத்த தெல்லாம் பெரு மோசமன்றோ?" என்று நந்தனரை நோக்கி வாய் கூசாது பேசினான்.

நந்தனார், 'இதுவும் சிவன் வேடிக்கை தான்!' என்று கருதிச் சிரியாமல் ஒன்றும் அறியாதவர் போல் கேட்டுக் கொண்டிருந்தார்.

பெரிய கிழவன் இன்னும் அதிக உற்சாகத் தோடு, "நந்தனாரே! நமக்கும் திருநாளோ? அந்த நியாய முண்டோ? என்ன மாயம் இது? கழனியே

நமது தெய்வம்; கழனியைச் சுற்றி வருவதே நமது வழிபாடு; உழுது பரம்படித்து விதை தெளித்து முளை கொள்ள நீரோடவிட்டுப் பழுதற நட்டுக் களை பிடுங்கி மடை திறந்து நீர் பாய்ச்சி வயலைக் காத்துக் கிடப்பதன்றோ, நமது தேருந் திருவிழாவு மாகும். இதற்கு மேல் திருவிழா வேண்டுமென்றால், காத்தவராயனுக்குப் பொங்கலிட்டு மகிழலாம்!" என்று வாக்கு வன்மையோடு பேசினான்.

நந்தனார் தட்டிப் பேசாதது கண்டு, தன் காரியம் ஜயம் என்றே கருதிய கிழவன், "நந்தா! புலைச் சாதியன்றோ நாம்! பூமி தரிசனம் போதுமன்றோ நமக்கு? சுவாமி தரிசனமுமுண்டோ! பயிர்த்தொழில் செய்வதும் பதர் தூற்றி நெல்லளப்பதும், ஊரை வளைந்து தமுக்கு அடிப்பதும், சுடலை காப்பதும், ஆண்டைமார் இடும் வேறு பணிவிடைகள் செய்வதும், குடக் கள்ளுண்டு களித்துக் குதித்துக் கூத்தாடுவதும், உறங்குவதும் நமது சாதி தர்மங்கள்! இவையே நமக்கு எளிதில் விளங்கும் தருமங்கள்! நம்மால் எளிதில் செய்யத்தக்க தருமங்களுமிவையே! நமது சாதி முறை இவ்வளவுதான் என்று 'உயர்ந்த' சாதியாரும் நமக்கு அடிக்கடி உபதேசிக்கிறார்கள்; நாமும் ஒப்புக்கொள்ளுகிறோம். இவ்வளவு தெளிவாகப் புலப்படும் விஷயங்களை விட்டு, வேத முனிவர்கள், 'வினவியும் கண்டோமில்லை!'

யென்று சொல்லும்-மூளைக்கெட்டாத - விஷயத்தை உடும்பு போலப் பற்றிக்கொண்டு, வாணாளை வீணாளாக்குவோன் பத்தனா, பித்தனா? நந்தா! நீ எங்கள் குலமைந்தனன்றோ? ஊர்ப்புலையனன்றோ? உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனம் செய்; சேரியையும் வயலையும் தரிசனம் செய்; சிதம்பர தரிசனத்தை உழைப்பின்றி உண்டு களித்திருப்போருக்கு விட்டு விடுவோம்'' என்று கூறி முடித்தான்.

கிழவனது பிரசங்க மழை ஓய்ந்தபின், நந்தனார் அப் பெரிய கிழவனது முகம் நோக்கிப் பளிச்சென்று, உருக்கமான குரலில்,

> "மீசை நரைத்துப் போச்சே—கிழவா,
> ஆசை நரைக்க லாச்சோ"?

என்று கேட்டார். கிழவன் ஒன்றும் தோன்றாது பிரமித்து நின்றான்.

நந்தனார் மீண்டும் அவனை நோக்கி, அன்போடும் அருளோடும்,

> "பாசம் வருவதாச்சே!—கிழவா,
> பாவம் விலகிப் போச்சோ!
> கூனிக் குறுகிப்போச்சே!—கிழவா
> கோபம் விலகிப் போச்சோ!"

என்று வினவினார். பெரிய கிழவன் விடையிறுக்க வகையறியாது 'தெறுதெறு' என்று விழித்தான். அவனுள்ளத்தில் பல வகையான எண்ணங்கள் அலையலையாகப் பொங்கி யெழுந்தன.

இதுதான் தக்க சமயமென்று நினைத்து நந்தனார், போதங் கரைந்து பொங்கிப் பேரன்போடு,

"அம்பலத் தரசனடா!—கிழவா,
ஆளும் தெய்வமடா!
திருவடி பணியாயோ—கிழவா,
தேடித் தெளியாயோ!"

என்று சொல்லி, விபூதி யெடுத்துப் பெரிய கிழவன் முகத்திலே தடவி வாயிலே போட்டு, அவனைக் கட்டி யணைத்துக்கொண்டு, செவியிலே சிவமந்திர முபதேசித்தார். உடனே அக் கிழவன் சித்தந் தெளிந்து ஓர் புதிய பக்தனானான்.

"சிவனடியார் அருள் இதுவோ!" என்று வியந்து மகிழ்ந்த கிழவனுள்ளம் பக்தி வெள்ளத்தில் கரைந்து போயிற்று. அவன் தன் வசமழிந்து பரவசமாகிப் பேசத் தெரியாமற் பேசினான். 'இன்றுதான் நான் பெரிய கிழவனானேன்! நந்தா, என் பந்தம் தீர்க்க வந்தாய்!' என்று வலம் வந்து வணங்கினான். "நந்தனே இந்தச் சேரிக்கும் ஊருக்கும் யாருக்கும் பெரியவன்!" என்று அக மகிழ்ந்து முகமலர்ந்து கூறினான். முடிவில் அவன், 'கலிதீர்ந்தேன்! அமுதம் உண்டேன்! ஆனந்தம் கொண்டேன்!' என்று கூவிக்கொண்டே புலையர்கள் கூட்டமாயிருந்த இடத்திற்கு வந்தான்.



பேரானந்தக் கடலாடி வரும் பெரிய கிழவன் அவர்களை நோக்கி, "நந்தன் உங்கள் வலையில் அகப்பட மாட்டான். எங்கள் தவராஜ சிங்க மன்றோ அவன்! நந்தி சந்நிதியில் விலகிய கதை கேட்டும், யானைமுகக் கடவுளே வந்து தடாகம் வெட்டிய புதுமை கேட்டும் நந்தனது மகிமையை உணர்ந்தோமில்லை. இப்பொழுதுதான் நான் நந்தனை அறிந்து கொண்டேன். நீங்களும் அவனைப் பணிந்து நல்வழிப்படுங்கள்," என்று சொன்னான்.

இவ்வாறு கிழவன் சொல்லக் கேட்டு, அப்புலையர்கள் மிகவும் துன்பமுற்று, "கிழவா, சாகும் காலத்தில் உனக்கும் இந்தப் பயித்தியமா ? ஐயோ! நந்தனால் கெடுக்கப்பட்ட சிறுவர் கூட்டத்தில் பெரிய கிழவனாகிய நீயும் ஒருவனாகச் சேர்ந்து கொண்டாயா? 'சிவ சிவ!' என்று சேரியைக் கெடுக்கத் தலையெடுத்தீர்களே!" என்று பிரலாபித்தார்கள்.

---

## எட்டாம் அத்தியாயம்

### ஞானபக்தியும் மூடபக்தியும்

'நந்தனது சிதம்பரப் பித்தம் நமது பெரிய கிழவனையும் பிடித்துக் கொண்டதே!' என்று வருந்திக் கதறிய புலையர்கள், மீண்டும் அவசரமான கூட்டம் ஒன்று கூட்டி, இனி என்ன செய்வதென்

பதைக் குறித்து ஆலோசனை செய்தார்கள். 'நாம் இனி என்ன செய்வோம்? இந்தப் பூமியில் இல்லாத புதுமையை நமது சேரியிலன்றே கண்டோம்!' என்று அவர்கள் ஒருவர்க்கொருவர் சொல்லித் துயரப்பட்டார்கள்.

அவர்களி லொருவன், 'நந்தன் ஒருவனாலே நமது சாதியே கெட்டுப் போய் விட்டது. சந்நிதிக்குச் சந்நிதி கூத்தாடுவது தானா நமது வேலை! இப்படிப்பட்ட அக்கிரமம் செய்கிறவர்களைத் தண்டிப்பதற்குச் சாமியு மில்லாமல், எங்கேயோ போய் விட்டது!' என்று வயிற்றெரிவோடு பேசினான்.

வேறொரு புலையன், 'சேரிச் சிறுவர்கள் கெட்டுப் போனார்கள். சிவ சிவ என்பதும் ஜெபிப்பதும், குளிப்பதும் கும்பிடுவதும் கூத்தாடுவதுமாயிருந்தால் தொழில் முறை பாழாகி விடுமன்றோ? இனி இவர்கள் ஒரு காசுக்கும் உதவாத ஆண்டிகளாகப் போய் விடுவார்கள். இப்படியிருந்தால், கள்ளுக்கடையை மூடிவிட வேண்டியதுதான்? இது என்ன யோக்கியதை? ஊருக்குப் பெரிய கிழவனும் கெட்டான்! உண்மை யறியாமல் சிதம்பரம் சிதம்பரம் என்று கூச்சலிடுகிறார்கள். ஐயோ! நமது மாரியாத்தாளுக்கு மதிப்பில்லையோ? மன்னார் சாமியின் மகிமையும் மறைந்து விட்டதோ?' என்றான்.

இவ்வாறு இவன் கூறியதைக் கேட்ட புலைப் பூசாரி, இது நல்ல சமயமென்று கருதி, மற்றவர் களை நோக்கி, 'வழக்கம்போல் சேரித் தெய்வங்களுக் குப் பூசை போட்டு, நாம் பலியிட்டு வேண்டினல், சேரிக்கு நல்லகாலம் பிறக்கும்' என்று கூறினன். புலையர்களெல்லோரும், வேறு யோசனை யொன்றும் அப்பொழுது தோன்ருததால், 'பூசாரி'யின் ஆசைப் பேச்சை அப்படியே ஒப்புக் கொண்டார்கள்.

தெய்வங்களுக்குப் பலியிடுவதற்காக எண்ணி றந்த ஆடு கோழிகள் சேரிக்கு வந்து சேர்ந்தன. அவ்வாறே மதுக்குடங்களும் ஏராளமாகக் கொண்டு வரப்பட்டன. பறையர்கள் சேரியை வளைந்து பந்தலிட்டு, பறை, பம்பை, கொம்பு, தம் பட்டம் முதலான வாத்தியங்களை இடைவிடாது முழக்கினர்கள்.

சண்டமாருதம் கண்ட கடலைப்போல், பூசாரி யின் உள்ளம் கொந்தளித்தது. அவன் சன்னதம் கொண்டு பேய்ச் சிரிப்போடு 'ஹா! ஹா! ஹா!' என்று அலறிக் கொண்டு, "சேரிக்கு நல்ல காலம் பிறக் கும்! சிதம்பரப் பித்து நந்தனுருக்குத் தெளிந்து விடும்! நன்ருகப் பூசை போடுங்கள்; சாமிகளுக்கு ஏராளமாகப் பலியிடுங்கள்!" என்று இடிக்குரலில் பேசினன்.



பிறகு அவன் சேரித் தெய்வங்களின் திரு நாமங்களை யெல்லாம் ஒரு கோவையாகக் கோத்து, மந்திரம்போல உச்சரித்து நீட்டி முழக்கி உச்ச ஸ்வரத்தில் பாடிக்கொண்டே கள்ளுண்டு கூத் தாடினான்.

புலையர்கள், 'சாமி! சாமி! குறையுண்டோ?' என்று கும்பிட்டுக் கேட்டார்கள். பூசாரி, 'வீரனை மறந்தீர், சேரி பாழாச்சு! இருளனை மறந்தீர், அது சிறுவருக்குக் கொண்டாட்டமாச்சு! காட்டேரியை மறந்தீர், அது உங்களைச் சிறுவர் கையில் காட்டிக் கொடுத்தது!' என்று ஆரவாரம் செய்தான். புலை யர்கள், 'தெய்வங்களே! உங்களுக்கு ஒரு குறையும் வைக்க வில்லையே! உங்களைத் தானே நம்பியிருக்கி றோம்; அடிமைகளை இப்படிச் செய்யலாமா?' என்று கேட்டார்கள்.

பூசாரி, 'வெறியன் வந்து விட்டான்!' என்று சொல்லி வெறிக்கக் குடித்தான். நொண்டி, நொ ண்டி நடந்து, 'நொண்டியின் ஆவேசத்தைக் காட் டினான். ஐயோ, சாமுண்டீ! சக்கம்மா! என்று பயங்கரமாக அலறினான், பதறினான். பிறகு, 'நல் லண்ணன்' பெயரைச் சொல்லி, ஒரு சாதுவைப் போல நடித்தான். வேறு சிலர், சின்னான் பெத் தண்ணன் முதலான தெய்வங்கள் தங்கள் மீது ஆவேசித்தன என்று கூக்குரலிட்டார்கள்.

Q23wx1;5N
N33 8

தாடி மீசை நரைத்துப்போன ஒரு கிழவன், 'முனியன்' ஆவேசித்து விட்டானென்று கூவினன். ஒருவன் சங்கிலியை மேலே போட்டுக் கொண்டு, 'நான் தான் சங்கிலியான்' என்று சொன்னன். தடித்திருந்த ஒருவன் தான் மாடன் என்று ஆடினன். எண்ணெயுண்ட இருள் போன்ற மேனியனன ஒருவனிடம் கறுப்பன் ஆவேசித்தான். யௌவன புருஷன் ஒருவனிடம், மோகினி முதலிய சில தெய்வங்கள் ஆவேசித்தன. நெடிய வடிவினன் ஒருவன்மீது,'பனைமரத்தா'னது ஆவேசம் தோன்றியது. இவ்வாறே மலையன், மன்னரன், வழி மறிச்சான், பக்கிரியான், மூர்க்கன் முதலான தெய்வங்கள் பாத்திர மறிந்து ஆவேசித்து வந்தன.

புலையர்களது கவனம் பல வேறு ஆவேசங்களின்மீது சென்று கொண்டிருந்ததை அறிந்த பூசாரி, பளிச்சென்று 'எல்லைப்பிடாரி! எல்லைப் பிடாரி!!' என்று உறுமினன். பிறகு அவன், 'எல்லைப்பிடாரி தொல்லைப்படாது, வெல்லப்படாது, தள்ளப்படாது, சொல்லப்படாது, கள்ளப்படாது!' என்று பிராசங்களாகச் சொற்களை மூச்சு விடாமல் அடுக்கிக் கொண்டு போனன். புலையர்கள் திறந்த வாய் மூடாமல், விழித்த கண் இமையாமல், பார்த்துக் கொண்டே யிருந்தார்கள். பூசாரி மீண்டும்,

'அது யாரையும் விடாது, கோபப்படாது, பட்டால் விடாது, துன்பம் தொடாது, தொட்டால் விடாது, இடங்கொடாது, அடங்கிடாது, அருளைக் கொடாது, நிலைவிடாது!' என்று செங்கல் அடுக்குவது போல் சொற்களை அடுக்கிக்கொண்டே போனான். இவ் வேடிக்கைகளை விலகி நின்று பார்த்துக்கொண்டிருந்த சேரிப் பெருங்கிழவன், அருகிலிருந்த நந்தனாரை நோக்கி, 'பயலுக்குக் குடிவெறி மண்டைக் கேறி விட்டது போலிருக்கிறது!' என்று சொன்னான்.

பிறகு புலைப் பூசாரி கம்பீரமாக எழுந்து நின்று,

"முண்டாசு கட்டிவரும் நொண்டி வீரப்பனைக்
கொண்டாடிப் பூசைகளைக் கொள்ளுவீ ரென்றான்."

நந்தனார் அதற்கு விடையாக,

"அண்டங்கள் பதினாலுக் கப்பாலு மிப்பாலும்
நின்றார்க்கு முண்டாசு நிலைக்குமோ? என்றார்"

புலையர்கள் நந்தனாரை அலட்சியம் செய்து, பூசாரியை விசேஷமான பயபக்தி விசுவாசத்தோடு நோக்கி,

"நேயமறி கோழியும் நிதமூன்று சாவலும்
தீயகள்ளும் வைத்துத் தெரிசிப்போம் என்றார்"

நந்தனார் ஜீவகாருணிய மிகுதியால் "ஆடு கோழி நீடு வாழ்க!" என்று வாழ்த்தினார்.

அப்பால் புலையர்கள் அனைவரும் பூசாரியின் கட்டளைக் கிணங்க,

"பித்துப் பிடித்திருக்கும் பேயனும் நந்தனுக்குச்
சித்தந் தெளிந்திடச் செய்குவீர்."

என்ற கூக்குரலோடு தெய்வங்களுக்குப் பூசை போடத் தொடங்கினார்கள்.

நந்தனும் அவரது நண்பர்களும் ஆறாத துயரத்தோடு, 'பக்தி வெள்ளம் பெருகிப் பாய்ந்தாலும், சேரியிலே நத்தைபோல் வாழ்வோருக்கு அது விசேஷ நற்பயன் தருமோ?' என்று சொல்லிக்கொண்டு அவ்விடத்தை விட்டு அகன்றனர்.

அவர்கள் சென்றபின், பூசையை முடித்துப் புலையர்கள் அயலூரிலிருந்த புத்திமானும் தங்கள் குல குருவுமான வள்ளுவனொருவனை நந்தனர் விஷயமாகக் கலந்து ஆலோசிக்க வேண்டுமென்று அங்கே சென்றார்கள்.

---

## ஒன்பதாம் அத்தியாயம்

### உயர்தர வியவசாயம்

நாளடைவில் ஞானபக்தி மூடபக்தியை வென்று வலியழித்தது. நந்தனுடைய 'அடியார் திருக்கூட்டம் தொகையிலும் செல்வாக்கிலும் அதிகரித்து வந்தது. பழைய சிறு தெய்வ வழிபாடுகளிலும் மிருக பலிகளிலும் களியாட்டங்களி

லுமுள்ள நம்பிக்கையும் உற்சாகமும் குறைந்து வந்தன. ஓய்வு நேரங்களிலெல்லாம் பாட்டும் பசனையும் கதையும் நல்ல காலக்ஷேபமும் நடைபெற்றன. புலையர்கள் பலரும் உடம்பையும் உள்ளத்தையும் சுத்தமாக வைத்துக் கொண்டு, நித்த நியமங்களான ஜபதப நிஷ்டைகளோடு, தங்கள் தொழிலையும் கவனமாகச் செய்து வந்தனர்.

ஒவ்வொரு நாளும் தத்தம் வேலை முற்றுப் பெற்றபின் அவர்கள் நந்தனர் தலைமையில் ஒன்ருகக் கூடி நின்று, கள்ளுண்டு கருத்தழிந்து கூத்தாடும் வழக்கத்தை அறவே ஒழித்து விட்டதால், அதற்கு மாருகத் தில்லையம்பலத்தில் நடம்புரியும் புண்ணிய மூர்த்தியாகிய ஆனந்த நடராஜப் பெருமானைத் திசை நோக்கி வணங்கி, உலகக் கவலைகளை உதறித் தள்ளி ஆனந்தமாகக் கூத்தாடுவார்கள்.

இரவில் நெடுநேரம் வரை, நந்தனர் அவர்களுக்குக் கருணைக் கடலான கடவுளின் மகிமையை எடுத்துரைப்பார். அவர்களும் பக்தி விசுவாசத்தோடு கேட்டு ஆனந்தம் அடைவர். தமக்கு விரோதமாகவும் தமது நன் முயற்சிகளுக்கு இடையூருகவு மிருந்தவர்களையும் அவர் அன்பால், ஒழுக்கத்தால், பொறுமையால், வசப்படுத்தலுற்ருர். தம் மீது புலிபோலப் பாய்ந்து சீறி வருவோரிடத்தும்,

அவர் பசுவைப்போலவே சாதுவாகவே நடந்து கொள்வார். முகத்தில் அடிப்போரையும் முத்த மிட்டுக் கொண்டாடுவார். தம்மைக் கல்லால் எறிந்து காயப்படுத்துவோரையும் தழுவி அணைத்து உபசரிப்பார். குப்புறத் தள்ளிக் கோபித்து உதைப்போரையும் கும்பிட்டு வாழ்த்தி, 'இறையருள் பெருகுவதாக!' என்பார்.

நந்தனாது உள்ளத்தில் உதயஞ்செய்து திகழ்ந்த ஞான ஒளியின் முன் சேரியில் செறிந்திருந்த அறியாமையிருளும் மூடபத்தியிருளும் மறைந்தொழிந்தன. அவரது நல்லொழுக்கத்தின் முன், அழுக்காறும் துரபிமானங்களும் தலையெடுத்து நிற்க முடியாமல் ஓட்டம் பிடித்தன. அவரது மெய்யன்பின் முன் பகைமை முதலிய துர்க்குணங்களெல்லாம் முகங்காட்டாது மறைந்தன. தியாக மூர்த்தியாக விளங்கிய அவரது அற்புத வசீகர சக்தியால், சேரி சிவலோகம் போல விளங்கியது. காலையிலும் மாலையிலும் புலையர்கள் சித்தம் மகிழ்ந்து பக்தி செய்தார்கள். பகல் முழுமையும் அவர்கள் பயிர்த்தொழிலிலும் பண்ணைத் தொழில்களிலும் ஈடுபட்டிருந்தார்கள்.

ஒரு நாள், பயிர்த்தொழில் முடித்து வந்த பின், நந்தனார் தமது தோழர்களை நோக்கிப் பின்வருமாறு பேசினார்:—

"அன்பர்களே! ஆருயிர்த் தோழர்களே! நாம் கைகால்களாலும், உடம்பாலும் உழைத்து வியவசாயம் செய்து வருகிறோம். இவ்வாறே கருத்தினால் உழைத்துச் செய்யும் உயர்தர வியவசாயம் ஒன்றுண்டு. 'பூமி தரிசனம்' இவ் வியவசாயத்திற்கு எவ்வளவு அவசியமாகுமோ, அவ்வளவு 'சுவாமி தரிசனம்' என்பது அவ்வியவசாயத்திற்கு இன்றியமையாததாகும். சிந்தித்துப் பாருங்கள்: "நண்பர்களே! இவ் வியவசாயத்திற்கு நிலத்தை உழுது பண்படுத்துவது அடிப்படையான காரியமல்லவா? அவ்வண்ணமே உண்மையாம் உழவைச் செய்து உள்ளத்தைப் பண்படுத்துவது, நாம் செய்ய வேண்டிய உயர்தர வியவசாயத்திற்குரிய அடிப்படையான காரியமாகும். நிலத்தை நன்ருக உழுது பண்படுத்தியபின், நாம் என்ன செய்கிறோம்? வளமாகப் 'பாத்தி' கட்டி விதை தெளிக்கிருேமல்லவா? அவ்வாறே, உண்மையால் பண்பட்ட உள்ளத்திலே, நல்விருப்பமென்னும் விதையை விதைத்தல் வேண்டும். நண்பர்களே! உழுது விதைத்து நாற்றைப் பிடுங்கி நட்டபின், என்ன செய்கிறீர்கள்? களைபிடுங்குகிறீர்களல்லவா? நன்று, நன்று! உயர்தர வியவசாயத்திலும் களையெடுத்தல் வேண்டும். பொய் யொழுக்கங்களான களைகள் மண்டித் துயர்கொடுக்கின்றன.

இக்களைகளைக் களைந்தெறிதல் வேண்டும். சாதாரண வியவசாய முறையில், மடைதிறந்து நீர்பாய விடுகிறீர்களல்லவா? உயர்தர வியவசாயத்திலும் மடை திறந்து நீர் பாய்ச்சுதல் வேண்டும்.

"அன்பர்களே! நாம் ஆத்திரப் படாமல் பொறுமை-நீர் பாய்ச்சுதல் வேண்டும். நன்செய்களைச் சுற்றிப் பார்க்கிறோமல்லவா? அவ்வண்ணமே தன்னம்பிக்கையோடும். தன்னறிவோடும் தம்மை நோக்கிக் கண்டு வருவதும் அவசியமாகும். பயிர்த் தலையிலே வேலியிட்டுக் காக்கும் சம்சாரியைப் போல், தன்னடக்கமென்னும் வேலியிட்டுப் பயிரைப் பாதுகாப்பதும் அவசியமாகும். இதுவும் செம்மையான பயிர்த் தொழிலேயாகும். இவ்வாறு பாடுபட்டுப் பார்த்தால், செந்நெல் கதிர் வீசி விளைவது போல், சிவகதியும் தானே முளை கொண்டு நாறெழுந்து கதிர் வீசி விளையும் என்பது திண்ணம். நண்பர்களே! வயிறு வளர்ப்பதற்கு அவசியமான பயிர்த்தொழிலைப் போலவே சிவகதி விளைக்கும் செம்மையான பயிர்த் தொழிலும் நமது ஆண்மை வளர்ச்சிக்கு—நமது உயர்தர வாழ்க்கைக்கு—இன்றியமையாததாகும்."

இவ்வாறு பேசியபின், அவர்தாம் இளமையில் வழிப் போக்கனான ஒரு துறவியிடம் ஒரு தரம் கேட்டு நினைவில் வைத்திருந்த அப்பர் அருள்மொழி

யான தேவாரத் திருப்பாட்டொன்றை அவர்களுக்குப் பாடிக் காட்டினார். அப்பாட்டு வருமாறு:—

"மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப்
பொறையெனும் நீரைப் பாச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்ப ராகில்
சிவகதி விளையு மன்றே!"

அத்தொண்டர் கூட்டத்தில் சிலரிடம் இயற்கையாகவே பாடுவதற்குரிய குரல் அமைந்திருந்தது. அவர்களும் நந்தனாரோடு அபேதமாக மனங் கலந்து பாடினார்கள். பாடப்பாடப் பாட்டின் பொருளும் இசையும் ஒன்று பட்டிசைந்து பேரின்ப வெள்ளமாகப் பொங்கி யெழுந்தன. அவ்வின்ப வெள்ளத்திலே அவர்களது உணர்வு கரைந்து போயிற்று. அவர்கள் புத்துயிர் பெற்று வீடு சேர்ந்தார்கள்.

நந்தனார் சொற்ப நேரம் தங்களைப் பிரிந்தாலும், அவரது தோழர்கள் சகிக்கமாட்டார்கள்; தாயைப் பிரிந்த சேய்போல் தவிப்பார்கள். அவரைக் காண்பதும் அவருடனிருப்பதும் அவர் சொல்லைக் கேட்பதும் அவர்களுக்கு எப்பொழுதும் ஆனந்தமாகவே யிருந்தன.

சில சமயங்களில் அவர்கள் அவரை நோக்கி, "ஐயா, நீங்கள் சொன்ன வியவசாயம் கஷ்டமான காரியமன்ருே? எங்களுக்கும் சிவகதி விளையுமோ? என்று மனம் அஞ்சுகிறது; உயிர் நடுங்குகிறது. நாங்கள் என்ன செய்வோம்?" என்று விண்ணப் பஞ் செய்து கொள்வார்கள். அவர் அவர்களை நோக்கி, அருள் தோய்ந்த புன்னகை செய்து, "நண்பர்களே, நமக்கினி அச்சம் ஏது? தில்லை நடராஜனிருக்கும்போது நடுக்க முண்டோ? சிறு வனுக்காக அருள் சுரந்து காலனைக் காலால் உதைத்த கடவுளிருக்க, அச்சமெனும் துச்சமான பேயும் நம்மை அணுகத் துணியுமோ? ஆலகால விஷத்தைக் கண்டு அஞ்சி ஓடிய அமரர்களுக்காக இரங்கித் தான் விஷமுண்டு பிறரைக் காத்த தயா நிதி யிருக்க, நமக்கும் குறையுண்டோ? நண்பர் களே! அவன் பெயரை நம்பினுல், நான் சொன்ன பெரிய வியவசாயம் சுலபமாகும். 'அரஹரா' என்று ஒரு குழி நட்டால் ஐங்கலம் விளையும் என்பது உயர்தர வியவசாயத்திற்கு விசேஷமாகப் பொருந்துமன்ருே!" என்று கூறுவார். அவர் களும் ஐயந்தெளிந்து அச்சமறுத்து, இறைவனை வாழ்த்தி ஆடுவார்கள்.

சில சமயங்களில் அவர்கள் பல வேறு கேள் விகளைக் கேட்பார்கள். ஒரு நாள் ஒருவன் விஸ்

தாரமான இந்த அண்டகோடிக ளெல்லாம் இறைவனிடத்தில் எவ்வாறு அடங்கிக் கிடக்கின் றன என்று வினவினன். நந்தனர் தந்தைபோல அவனைத் தழுவிக்கொண்டு, 'வித்துக்குள் விருட்சம் அடங்கியிருப்பதுபோல் இறைவனிடத்தில் அண்ட கோடிகளெல்லாம் அடங்கியிருக்கின்றன' என்று மறுமொழி கூறினர்.

தத்துவங் கடந்த தனிமுதற் பொருளை எவ் வாறு தரிசிப்பது என்று ஒருவன் வினவினன். நந்தனர் சிரித்துக் கொண்டு, 'பக்தி வலை வீசிப் பார்க்கும்போது தனிமுதற் பொருளான நடராஜா வின் தரிசனம் கிடைக்கும்' என்ருர்.

ஒரு கிழவன் நந்தனரை நோக்கிப், 'பித்த னைப் பேய்கள் பிடித்துக் கொண்டது போல் நம் மைச் சுற்றி யலைக்கும் சித்த விகாரங்கள் தெளி யுமோ, நந்தா?' என்று கேட்டான். நந்தனர் அவ னுக்கு அன்பு நெறியின் இரகசியங்களை அறிவித் துச் சித்தத்தைத் தெளியச் செய்யும் உபாயங்களை விளக்கினர்.

அவர்கள் எல்லோரும் நந்தனரைக் கண் குளிர நோக்கி, 'நந்தனரே, நல்ல செய்தி சொன் னீர். உமது காலைத் தொட்டுக் கும்பிடுகிருேம்' என்று உவகையோடு சொன்னர்கள். நந்தனரோ, 'எல்லாம் இறையருள்! எல்லாம் உங்கள் பாக்கியம்'

என்று கூறினர். பிறகு அவர் தமது 'வியவசாயம்' வீணாக வில்லையென்று மகிழ்ந்து, அவர்களுக்கு விடை கொடுத்து அனுப்பினர்.

---

## பத்தாம் அத்தியாயம்

### ஆதனூர் வேதியன்

சேரியில் நந்தனரது செல்வாக்கு அதிகரித்து வருவதைக் கண்டு, 'பூசாரி' தன் பிழைப்பிற்கு வழி இனி இச்சேரியில் இல்லாமற் போய்விடுமே யென்று பெருங்கவலை கொண்டான். அவனது தூண்டுதலால், நந்தனர் விஷயமாக முடிவான ஆலோசனை செய்யும் நோக்கத்தோடு, புலைச் சேரியில் ஒரு பெருங் கூட்டம் கூடியது. ஆனல் அக் கூட்டத்தில், நந்தனருக்குச் சேரியிலிருந்த பெரு மதிப்பு நன்கு வெளிப்பட்டது.

வயது சென்ற சில புலையர்கள் மாத்திரம், அதிகமான பக்தியால் தொழில் முறை கெட்டுப் போகுமென்று கருதி, நந்தனரைப் பணிந்து, நல்ல வார்த்தை சொல்லி, "நாங்கள் நாளொன் றுக்கு மூன்று முறைதான் 'சிவனே' என்று சொல்லுவோம், மற்ற வேளையில் எங்கள் தொழிலைச் செய்து கொண்டிருப்போம்" என்று சமாதான மாக வேண்டிக் கொண்டனர். நந்தனரும் சந்தோஷித்து, 'எல்லாம் சிவன் செயல்!' என்று நம்பி,

'நல்லது, அப்படியே தப்பாமல் செய்யுங்கள்' என்று சொல்லிச் சம்மதித்தார். எனவே சேரி வாசிகள் அனைவரும் தினமும் மும்முறை சிவ நாமத்தைச் சொல்லவேண்டு மென்னும் தீர்மானம் அக்கூட்டத்தில் நிறைவேறியது.

நந்தனாரது செல்வாக்கைக் கெடுக்க வேண்டும் என்னும் நோக்கத்தோடு கூடிய கூட்டம், 'பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்த கதை'யாகவே முடிந்ததென்று கண்ட 'புலைப்பூசாரி' பழைய வழக்கங்களில் அமிதயான பற்றும் பிடிவாதமும் கொண்ட சிலருக்குத் துர்ப்போதனை செய்து, இவர் செய்யும் அக்கிரமங்களை இவரை அடிமை கொண்டிருக்கும் பெருஞ் செல்வனுன, 'ஆண்டைப் பார்ப்பானி'டம் தெரிவித்தல் வேண்டுமென்றும் அப்பொழுதுதான் நந்தனாரது மதம் ஒடுங்குமென்றும் சொல்லி, அவர்களைத் தன் அபிப்பிராயத்திற்கு இணங்குமாறு வேண்டினுன்.

அரவன், தொந்தி, ஆனையேறி, முத்துமாரி, கழனி காத்தான், பாய்ச்சலூரான், ஆண்டி, சேவகன், சொறியன், வெறியன், கணியன், எல்லை சுற்றி என்னும் பெயர் கொண்ட பன்னிரண்டு பேரும் நந்தனாரது, 'ஆண்டை'யும் ஆதனூர் வேதியன் என்று பிரசித்தி பெற்றிருந்தவனுமான சீமானது மாளிகையை நோக்கிப் புறப்பட்டார்கள்.

அவர்கள் தூரத்திலே நின்று கொண்டு கூவி யழைத்ததைக் கேட்டு, வேதியன் தன் மாளிகை யைச் சார்ந்த தோட்டத்தில் வந்திருந்து கொண்டு, புலையரிடம் வந்த சமாசாரம் என்ன வென்று கேட்டான்.

பறையர்கள், நந்தனர் மீது குற்றம் சொல் லத் தொடங்கி, அவரது பக்திப் பெருக்கின் விளைவு களைத் தாங்கள் கண்டபடி சித்தரித்துப் பேசலுற் ருர். பேச்சினிடையே, பக்தி பண்ணும்படி நந் தனர் தங்களையும் இம்சிக்கிருரென்று சொல்லி, 'ஆண்டை'ப் பார்ப்பானுக்கு 'அடிமை'யின் மீது கோபம் பிறக்கும்படி ஜாலஞ் செய்தார்கள். அவ் வாறு பக்தி செய்வதால் தங்களுக்கு மானம் போய் விட்டதென்றும், அம்மான நஷ்டத்திற்கு நந்த னரே காரணமாவாரென்றும் சொன்னர்கள். நந்தனரை இவ்விதமாக ஆட்டிவைப்பது பல வேறு சேரித் தெய்வங்களில் எது தான் என்று தெரிந்து கொள்ள இயலாத நிலையில், பூசைகள் போட்டுப் பார்த்ததாகவும், அப்பூசைகளால் ஒரு பயனும் ஏற்படவில்லை யென்றும், அவை வீண் செலவும் சிரமமுமாகவே முடிந்தன வென்றும் ஒப்புக் கொண்டார்கள்.

முடிவில், தங்கள் குலகுருவான வள்ளுவ னிடம் கலந்து யோசித்ததையும், அவன் நந்த

னுரை ஆட்டிவைப்பது சேரித்தெய்வ மன்றென்று துணிந்து, மயான உருத்திரனுரே, இவரை வாட்டுகிருரென்று யுக்தியாகக் கண்டுபிடித்துக் கூறியதையும், நந்தனது நோய் தெளியாத நோய் என்று வள்ளுவனே ஒப்புக் கொண்டதையும், அவர்கள், 'ஆண்டை'யிடம் ஒளியாதுரைத்து, நந்தனர்மீது தங்களுக்குள்ள விசேஷ அனுதாபத்தையும் தெரிவித்தார்கள்.

இவ்வாறு புலையர்கள் முறையிட்டுக் கொண்டதைப் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த வேதியன் தன் மன நிலையை வெளியிடாமலே, அவர்களை நோக்கி, 'நான் இவ்விஷயத்தில் என்ன செய்ய வேண்டுமென்று சொல்லுகிறீர்கள்' என்று சுருக்கமாகக் கேட்டான்.

புலையர்கள் உடனே, 'இவரை அடக்கி ஆளும் ஐயே! அடக்கி யாளுமையே!' என்று கூவினர்கள். அப்புலையர்களில் ஒருவனான வெறியன், 'ஐயோ! சாமீ! குடிக்கக் கூடாதென்றும் தெய்வங்களுக்குப் பலியிடலாகாதென்றும் தடுக்கிருர். குடியாத குடிக்கு விடிவுண்டா? சாமீ! துடுக்குக்காரர். சாமீ! இவரைப் பிடித்துக் கண்டித்து அடக்கியாளவேணும், சாமீ!' என்று படபடப்பாகப் பேசினன்.

5

வேதியன் சிரித்துக்கொண்டு புலையர்களைப் பார்த்து, 'நந்தனுடைய நோக்கந்தான் என்ன?' என்று கேட்டான். புலையர்கள், "நந்தனர், 'பொன் னம்பலம், பொன்னம்பலம்' என்றே சொல்லிக் கொண்டு, 'நாளைப் போவேன்!!' என்று ஊணு றக்கத்தையும் துறந்துபுலம்பிக் கொண்டிருக்கிறார். இவர் கூட்டத்தைச் சேர்ந்த சிறு பிள்ளைகளெல் லாம் சாம்பலைப் பூசிக்கொண்டு வீண்பொழுது போக்குகிறார்கள். என்ன மந்திரம் போட்டாரோ? என்ன சொக்குப்பொடி தூவினரோ? குழந்தைகள் பெற்றோர் சொல்லைக் கேட்பதில்லை. சிறுவர் சிறுமி யர்கள் மூத்தோர் சொல்லைக் கேட்பதில்லை. பழ மையான பழக்க வழக்கங்களை யெல்லாம் 'தூ' வென்று தள்ளிவிட்டார்கள். பூசாரிக்கு மதிப் பில்லை; வள்ளுவருக்கு மதிப்பில்லை; சேரித் தெய் வங்களுக்கும் மதிப்பில்லை யென்றால் நாங்கள் என்ன செய்வோம்? பேசுந் தெய்வமாகிய ஆண் டைச் சாமிதான், எங்கள் குலத்தைக் கெடுக்க வந்த கோட்டானைத் திருத்த வேண்டும்' என்று கேட்ட கேள்விக்கு நேரே விடை சொல்லாமல் காட்டை யும் மேட்டையும் வளைத்துப் பேசினர்கள்.

வேதியன் புலையர்கள் சொன்னதை யெல்லாம் கேட்டபின், அவர்களை நோக்கி, "நந்தன் காலைப் பொழுதில் இங்கே வந்திருந்தான்; கள்ளக் கும்பிடு

கள் போட்டான்; குழந்தையைப் போலே பேசிப் பசப்பினுன்; போடா! என்று சொன்னேன். நீங்கள் சொல்வதைப் பார்த்தால், இந்த ஜம்பூத்வீபத்தில் இவனைப் போன்ற வீணன் இருக்கமாட்டானென்றே நினைக்கிறேன். சிதம்பரம் செல்ல நான் அவனுக்கு ஒரு நாளும் விடை கொடுக்க மாட்டேன். நீங்கள் போய் வாருங்கள்" என்று சொல்லியெழுந்தான். புலையர்கள் சந்தோஷங் கொண்டு சேரி சேர்ந்தனர்.

---

## பதினொராம் அத்தியாயம்

### ஆண்டானும் அடிமையும்

புலையர்கள் போனபின் நந்தனர் வழக்கம் போல வேதியரிடத்தில் வந்தார். புலையர்கள் தனக்கு அறிவித்த விஷயங்கள் சேரியிலிருந்து வெகுதூரம் விலகி வாழ்ந்த அவனுக்குப் புதுமையாக விருந்ததோடு, ஒருவாறு மனக்கலக்கத்தையும் விளைத்து விட்டன. எனவே நந்தனரோடு நீண்ட சம்பாஷணை செய்து அவரது மனக்கருத்தையெல்லாம் உள்ளவாறு தெரிந்துகொண்டு, அவரைத் திருத்தி, எப்போதும் போல் அடிமை கொண்டிருக்க வேண்டுமென்று வேதியன் தீர்மானித்துக் கொண்டான்.

நந்தனார் தூரத்தில் வந்து கொண்டிருக்கும் போதே, பிராமணன் அவரை உற்று நோக்கத் தொடங்கினான். நந்தனார் தமது மேனி முழுமையும் திருநீறு பூசியிருந்தார். 'அரகர சிவ சிவ!' என்று சொல்லிக்கொண்டும் 'சிதம்பரம் போவேன், நாளைப் போவேன்' என்று சொல்லிக் கொண்டும் வந்தார். அவர் நெருங்கி வரவர அவரது திரு முகத்தை உற்றுநோக்கிய வேதியனுக்கு, 'இவர் நமக்குச் சொந்தமான நந்தன் அல்லர்; வேறொரு நந்தனார் ஆவர்' என்னும் உணர்வு பிறந்தது.

பிராமணன் ஒன்றும் பேசவில்லை. அப்பொழுது நந்தனார், 'நான் திருச்சிற்றம்பலத்தைக் கண்டு ஆனந்திக்க விரும்புகிறேன். ஐயரே, விடை கொடுத்து அனுப்புவீர்' என்று வேண்டினார். 'நந்தா, நீ சொன்னது எனக்கு விளங்கவில்லையே!' என்று கூறிப் பகற்கனவு காண்பவன் போல் வேதியன் விழித்தான்.

நந்தனார் சொன்னார்:—"தில்லையம்பலத் தலமொன்று உண்டாம்; பார்த்தவர்க்கு அது கருணை பொழியுமாம்! அத்தில்லைக் காட்டிலுள்ள மருந்தே பிறவிப் பெரும் பிணிக்குக் கைகண்ட அருமருந்தாம். அம்மருந்து பிரமன் எழுத்தையும் அழித்து விடுமாம். அம்மருந்தைப் பார்த்துவர உத்தரவு தாரும்."

இவ்வாறு நந்தனார் கூறியதைக் கேட்ட பிராமணன், கனவு காண்பவன் திடீரென்று விழித்துக் கொள்வது போல் விழித்து, 'இவன் சோம்பேறிகளைப் போல் வீண் வேதாந்தம் பேசுகிறான். இப்படிப்பட்ட பேச்சை எவனோ ஒரு துறவியினிடம் கிளிப்பிள்ளை போல் கற்றிருக்க வேண்டும். கற்ற பாடத்தை நம்மிடத்திலேயே காட்ட வந்து விட்டான். இவனுக்குப் புத்தி கற்பிக்க இதுதான் சமயம்' என்று நினைத்தான்.

உடனே அவன் நெஞ்சம் துடித்து முகத்தில் கடுங்கோபத்தைத் தோற்றுவித்துக்கொண்டு, நந்தனாரை நோக்கி, 'நந்தா! உன் அதிகப் பிரசங்கம் போதும், போதும். அப்படிப்பட்ட பிரசங்கத்தைச் சேரியோடு நிறுத்திக்கொள். சேரியில் சிவ பக்தியாம்! உன் செய்தியை நான் தெரிந்துகொண்டேன். 'உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி கருடனாகுமோ? சேரிப் புலையனுக்கும் சிதம்பர முண்டோ? சிதம்பரம் போவதிருக்கட்டும். சிதம்பரம் என்று வாயால் சொல்லத்தான், நினைக்கத் தான், உனக்கு யோக்கியதை யுண்டா? இனி இப்படிப்பட்ட பேச்சை விடு. நாற்றைப் பதத்தில் பிடுங்கி நடுவதும், வேறு பயிர்த்தொழில்களும் பறைத் தொழில்களும் செய்வதும், உக்கிர மாடன் உன் மத்த வீரன் முதலான தெய்வங்களுக்குப் பலி

கொடுத்துக் கள்ளுக்குடம் வைத்து வழிபடுவதுமே உங்கள் சாதி முறைகளாகும்" என்று 'மடமட' வென்று பேசினன்.

வழக்கமான மன அமைதியை இழந்து பதறிப் பேசும் பார்ப்பானை நோக்கி நந்தனர் கும்பிடு போட்டு மெள்ளப் பேசினர். 'சாதியினும் சமயமே மேலானது. பக்தி பண்ணிக் கொண்டிருந்தால் எச்சாதியினரும் முக்தி பெறுதல் கூடும். எத்திசையிலும் எவ்வுலகிலுமுள்ள எவ்வுயிரினும் அவ்வுயிராய்க் கலந்து நிறைந்திருக்கும் பரம்பொருளின் சந்நிதியில், மக்கள் அனைவரும் சமானர்; ஆண்டானும் அடிமையும் சமானர்; செல்வனும் ஏழையும் சமானர்; கற்றவரும் கல்லாதவரும் சமானர் என்று இவ்வாறு பேசத் தொடங்கிய நந்தனர், தாம் தமது, 'ஆண்டை' யைப்போல் வித்தைகள் கற்றதில்லையென்றும், தம்மைப் போன்றவனுக்கும் பக்தியால் பாகதியுண்டெனத்தமது உள்ளம் சொல்லுகிறதென்றும், தாம் ஏதாவது குற்றங்கள் செய்திருந்தால் அத்தனையும் பொறுத்து ஆதரவாக 'ஆண்டை' உத்தரவு கொடுத்துத் தம்மை அனுப்பிவைக்க வேண்டுமென்றும், கூறி முடித்தார்.

பிராமணன் அசையவில்லை. "அடிக்கடி மறுத்து நான் சொல்லவோ? நீ அடிமைக்காரன் தான்

என்பது உன் நினைவில் இருக்கட்டும். சாசனம் இருக்கிறது; எடுத்துக் காட்டுவேன். தடுத்துப் பேசினுல் தாடையில் அடிப்பேன்" என்று உறுமிக் கொண்டு,

"சாதியிலே எளியவன் நீ அறிவாயோ? என்ருன்".

உடனே நந்தனுர், வேதியர் கேட்ட கேள்விக்கு விடையாகப் பளிச்சென்று,

"ஆதியிலே பேதமில்லை, அறிவீரோ?"

என்ருர்.

பிராமணன் நந்தனுரது விடையைக் கேட்டு ஆச்சரியமுற்று, இவனேடு சமாதானமாகவே பேசித் தனது காரியத்தை முடித்துக்கொள்ள வேண்டு மென்று துணிந்தான். பிறகு அவன் நந்தனுரைப் பார்த்து, "நந்தா! எல்லாம் விதியின் செயல். நீ புலையனுகவும் அடிமையாகவு மிருப்பதும், நான் எஜமானுகவும் பிராமணனுகவும் இருப்பதும் விதியின் பயனல்லவா? நீ இதற்காக வருந்தி, 'எட்டாப் பழத்திற்குக் கொட்டாவி' விடுவது அறிவுடைமை யாகுமோ?" என்ருன். நந்தனுர் சுருக்கமாக, 'மதியில்லாதவர்க் கெல்லாம் விதியே' என்று கூறி, 'மதியால் விதியை வென்ற மார்க்கண்டனே சாட்சி' என்று சொன்னுர்.

பிறகு அவர் வேதியரை நோக்கிப் 'பலகலையும் கற்றுணர்ந்த ஐயரே! கல்வியறிவில்லாத நான்



சிதம்பரத்தை ஒருதரமாவது தரிசித்து வர வேண்டுமென்று ஆசை கொண்டேன்; தயவு செய்து அனுப்புவீர்!' என்று மீண்டும் பிரார்த்தித்தார். பிராமணனோ பிடிவாதமாக மறுத்து, நந்தனை இகழ்ந்து, பயமும் நயமுமாகக் கூறுவான்:- "சிதம்பர தரிசனம் வேதியர் செய்வதுதான் நியாயம். நீ அதை நினைப்பதும் பாபமன்றோ? முனிவரும் அமரரும் காணாது தேடித் தவிக்கும் பேரின்ப வீட்டை ஆதனூர்ப் புலைச்சேரியிலுள்ள நீ கண்டறிவாயோ? பேசாமல் சேரிக்குப்போ. வீரனைத் தொழுது பகலெல்லாம் வயலை உழுது வாழ்வதை விட்டாய். இராக் காலங்களில் பந்தம் பிடித்துத் தடியெடுத்துக் கொம்பு தம்பட்டம் முழக்கிக் கோலாகலமாகப் பறையரோடு ஊர் சுற்றி வந்து காக்கும்படி கிராமத்தார் இட்ட காவலையும் விட்டாய். ஊணுறக்கமும் விட்டாய். எப்போதும் சிவ சிதம்பரம், தில்லை யம்பலம் என்று புலம்பிப் புலம்பித் தாயை விட்ட குழந்தை போல வாய் விட்டலறிப் பேய் கொண்டவன் போல மதி மயங்கித் திரிகிறாய். நந்தா, உனக்கு இவ்விதமான மயக்கம் வந்ததற்குக் காரணம் என்ன? நீ என் அந்தரங்கமுள்ள சொந்தப் பண்ணையாளன்றோ! உன் கால் பட்டால், பாழான பூமியும் பசுமை கொள்ளுமே! உன் கை பட்டால் கதிர் ஒரு முழம்

நீளுமே; கட்டுக் கலம் காணுமே! நீ தொட்டது தங்கமாக விளையுமே! இப்பொழுது நீ பித்தனுய்ப் போனதற்குக் காரணம் என்ன? இந்தச் சிதம்பரப் பித்தம் எவ்வாறு தெளியுமோ?" என்றான்.

நந்தனுர் சொன்னர்:—"அடிமையின் பித்தம் தெளிய மருந்தொன்று இருக்கிறது. அது சிதம்பரத்திலேதான் இருக்கிறது; மற்ற மருந்தினல் என் பித்தம் தெளியப் போவதில்லை. அம் மருந்தின் மகிமையை என்னென்று கூறுவேன்! பக்தமணிகள் பார்த்துக் களித்த மருந்து! அது தீராத நோய்களேயும் தீர்த்துவைக்கும்; ஊழ்வினையை வேரறுக்கும். ஐயரே, அது சாதியைப் பாராது. என் சித்தத்தைக் கட்டி யிழுக்கிறது! ஐயோ! எத்தனை அன்பர்கள், அறிஞர்கள், யோகியர், முனிவர்கள் அம்மருந்தினை அடைய முயற்சி செய்தார்கள், செய்கிருர்கள், செய்வார்கள். பறையா, உன் பித்தம் தெளிய நீயும் போய்ப் பார் என்று உத்தரவு தரலாகாதா?"

இவ்வாறு சொல்லிக் கொண்டே நந்தனுர் ஆனந்தக் கூத்தாடினர். மயானருத்திரனுர் இப்படி ஆட்டிவைக்கிருரென்று புலையர்கள் முறையிட்டது பிராமணனது நினைவில் வந்தது. அவன், 'ஐயோ, இவன் பித்தம் தெளியவில்லையே! நாற்பது வேலி நிலம் நடுகை நட்டாக வில்லையே!

நல்லவனும் சாமர்த்திய சாலியுமான நந்தனில்லாமல் என் பண்ணைத் தொழில் நடக்குமோ? இவனைத் திருத்தவும் முடியவில்லை; கைவிடவும் முடியவில்லையே!' என்று துயரமுற்றுப் புலம்பினான்.

---

# பன்னிரண்டாம் அத்தியாயம்

## சோதனையும் வெற்றியும்

'இனிமேல் சிதம்பரம் போவேன்; போகாவிடில் பிராணனை விடுவேன்' என்று உறுதி செய்து கொண்டு, நந்தனார் ஒரு நாள் வேதியன் பால் சென்று தலை வணங்கிக் கைகுவித்து மனம் துடித்துக் கண்டிப்பாகச் சிதம்பரம் போகவேண்டுமென்று உத்தரவு கேட்டார்.

மறையவன் கோபித்துக் கொண்டு, 'பறையருக் கெப்போதும் சேரியே சொர்க்கம்' என்றான். நந்தனார், 'மறையோருக் கெப்போதும் வாயிலே தர்க்கந்தான்' என்று கூறி, இவ்வளவு கடுமையாகத் தம்மைக் கவலைப் படுத்துவது நியாயமோ! என்று கேட்டார்.

பிராமணன், 'அடிமையாய் வந்து நீ அவலப் படுத்துவதேன்' என்று மறு கேள்வி கேட்டு, 'அப்பா, பஞ்சமனாகிய உனக்கு உண்மை விளங்குமோ' என்றான். நந்தனார், 'கள்ளம் போனால்

உள்ளது காணும்' என்று அமைதியாகச் சொன்னார். மறையவனோ, 'பலகலை கற்றிருந்தும் நான் பறையனுக்குத் தோற்பேனோ?' என்னுஞ் செருக்கோடு, 'வெள்ளம் போனால் உள்ளது விளையும்' என்று 'ஏட்டிக்குப் போட்டியாகப்' பேசினான்.

நந்தனார், பார்ப்பானது நிலைமைக் கிரங்கி, "ஐயோ! உங்கள் மனத்தையும் என் மனத்தையும் ஏன் இவ்வாறு புண்ணாக்கிக் கொள்ளல் வேண்டும்; உள்ளங்கால் வெள்ளெலும்பாக உமக்கு ஓடி ஓடி உழைத்த அடிமையிடம் இவ்வாறு பேசலாமா? மார்கழி மாதம் திருவாதிரை நாள் வரப்போகிறது, ஐயா, ஒரு தரம் போய்வா என்று இந்த அடிமைக்கு உத்தரவு கொடுக்கலாகாதா?" என்று கெஞ்சிக் கேட்டார்.

பிராமணன், 'மாடு தின்னும் புலையா! உனக்கும் மார்கழித் திருநாளோ? நண்டுக்குக் கலியாணமும் நரிக்குச் சங்கராந்தியு முண்டோ? இது நாடு சிரிக்கும் வார்த்தை யன்றோ?' என்று கொடுமையாக மறுமொழி சொன்னான்.

"கட்டை யிருக்கையில் சிதம்பரம் போய் நான் காணவேணும். நாளுக்கு நாள் ஆசை அதிகமாக விளைகிறது. உங்கள் காலில் கும்பிடுகிறேன்" என்று நந்தனார் தாழ்ந்த குரலில் பரிதாபமாகப் பேசினார்.

பிராமணன்:—சபாஷ்! நன்றாயிருக்கிறது. நீ சிதம்பரம் போக வேண்டுமென்று கேட்பதை ஆலோசிக்க ஆலோசிக்க, அது மிகமிக ஆச்சரியமாகவே யிருக்கிறது.

நந்தனார்:—ஐயரே, நான் என்ன செய்வேன்? அடியேன் அறியாச் சிறியேன். எனினும் ஆசை பேராசையாகவே யிருக்கிறது.

பிரா:—நீ போனாலும் பலன் பெறமாட்டாய். உனக்கு அவ்விடத்தில் என்ன அலுவல்? உனக்கு அல்லும் பகலும் சோறளித்துக் காக்கும் அம்பலவாணன் ஆதனூர் வேதியனை இங்கிருக்கும்போது, ஏன் அங்கே போக வேண்டுமென்று அல்லற் படுத்துகிறாய்.

நந்த:—நான் என்ன செய்வேன்? என் உயிர் ஒய்ந்தாலும், பொன்னம்பலத்தின் மீதுள்ள ஆசை ஒய்வதில்லையே!

பிரா:—(கடுஞ் சீற்றங் கொண்டு) நந்தா, உன்னை நல்லவனென்று நம்பினேன். திருட்டு வேடங் கொண்ட முரட்டுப் பயல் என்று இப்பொழுது தீர்மானிக்கிறேன். நாற்பது வேலி நடுகைக்குக் காத்திருக்க, நீ சிவமென்றும் சிதம்பரமென்றும் கதை பேசுகிறாய். பாவாடைராயன் சாட்சியாக, உன்னை நான் சும்மாவிடமாட்டேன். என்னைப் போன்ற பெரியவர்

களுக்கும் விளங்காத ஜகதீசனுடைய திரு நாமத்தை நீ கத்திக் குரைக்கலாமா? வித்தை யொன்றும் அறியாதவன் பக்தி பண்ண லாமா? பெரியோர்களிடத்தே சத்தம் போட லாமா?

நந்தனர்:—ஐயரே! என் ஜன்மம் வீணுன ஜன்ம மாகுமா! ஏழை யென்றும் அடிமை யென் றும் பிறந்து விட்டால், தெய்வமும் இல்லா மல் எங்கேயோ போய் விடுமோ? பாவியேன் ஆசை வைத்து விட்டேன். நேசம் வைத்த நெஞ்சையும் அம்பலத் தெய்வம் மோசம் செய்து வஞ்சிக்குமோ?

வேதியனது கோபம் அளவு கடந்து பொங்கி யது. 'உன் பக்தியால், என்னுடைய நாற்பது வேலியும் நாசமாகுமோ?' என்று கர்ச்சித்துக் கொண்டு, நந்தனரை, 'வழி தெரியாத குருடா!' என்று ஏசி வாயால் திட்டித் தேள்போல் கொட்டி ஞன். அவனது சினம் அறிவைப் புகைத்து விட்ட தால், பிராமணன் தன்னை மறந்து நந்தனரது மகி மையை ஒரு சிறிதும் உணராது, அவரைக் கல்லா லெறிந்து தடியால் அடித்தான்.

நந்தனர் சிறிதும் வருத்த மின்றி, 'ஐயரே உமது கை நோகுமே!' என்று இரங்கி, 'இன்னம் சிதம்பரம் போகவேண்டு மென்று உத்தரவு பெற

இங்கு வருவதில்லை. ஐயரே! உங்கள் தயவிருந்தால் போதும்' என்று சொல்லி, ஒரு பெரிய கும்பிடு போட்டுவிட்டு மீண்டார்.

அன்றே அவர் வீர வைராக்கியத்துடன் தமது துயரங்களை யெல்லாம் அம்பலவாணனுக்கே ஒப்புவித்தார். "இறைவனே! ஏழையேனை நீ சோதிக்கிருயோ? நீ பார்ப்பானுள்ளத்தில் இருப்பது போல் பறையனுள்ளத்திலும் கோயில் கொண்டிருப்பதில்லையா! ஐயா, உன் அடைக்கலம், அத்தா, நான் வருவேனோ; அம்பலத்தை அடைவேனோ? சற்றேயாகிலும் உன் சந்நிதியைக் கண்டு களிப்பேனோ? ஆவி தவிக்கிறது; உள்ளம் கரைகரைந்து உருகுகிறது. எனினும் உய்யும் வழியில்லையே! பாவியேனுக்குப் பார்ப்பான் மனமிரங்கான்! அவனுள்ளிருந்து, உத்தரவு தருவதும் உனக்கு அருமையோ? தில்லைத் தெய்வமும் புலையர்க்குக் கல்லாகச் சமைந்ததோ? அன்னையும் தந்தையும் ஆவியும் பொருளுமாகிய பொன்னம்பலவனைப் போற்றுதற்கும் உரிமை பெருத ஜன்மமோ பெற்றேன்? அடிமுடி யொன்று மில்லாத அம்பலத்தரசே! உன்பால் கொடியேன் வந்தால் உனக்கும் குறை வுண்டோ? பத்துவருஷ காலமாகப் பார்ப்பானைக் கேட்டும் பயனில்லையே! அவன் சித்தமிரங்கிப் போய்வா என்று ஒரு நல்ல வார்த்தை சொல்

லக் காணேன். ஐயோ! நாற்பது வேலி நிலத்தையும் நடுவதார்? காப்பதார்? களை பிடுங்குவதார்? செக்குமாடு போல் இப்படியே சுற்றிச் சுழன்று உழைத்துக் கொண்டிருந்தால், சிதம்பர தரிசனம் எப்போது சித்திக்கும்." என்றிவ்வாறு எண்ணமிட்டுக்கொண்டே அன்றிரவு படுத்திருந்தார்.

இத்தகைய நினைவின் வெள்ளத்தினிடையே எவ்வாறே கொஞ்சம் நித்திரையும் ஏற்பட்டது. அந்நித்திரையில் ஒரு கனவும் தோன்றியது. தில்லை நாதன், கனவினில் வந்தார். நந்தனரது கருத்திலே கலந்திருந்த திருவுருவம், சுடர்நகை புரிந்து, அவர் கண்முன் தோன்றியது. 'குறையில்லாது, உமது கழனிகளை நமது பூத கணங்களால் நடச் சொன்னேம்; மறையவனுக்குக் காட்டி உத்தரவு பெற்று நீ விரைந்துவா' என்று சொல்லி எம்பெருமான் அம்பலத்தே சென்று மறைந்தார்.

நந்தனர் நித்திரை நீங்கி வயல்களைப் போய்ப் பார்த்தார்; பிரமித்தார்; பெருவியப்பும் பெருமகிழ்வும் எய்தினர். 'என்ன ஆச்சரியம்! என்ன அற்புதம்! களையெடாமல் ஜலம் விடாமல் கதிர் ஒரு முழம் காணுமாம். ஏரி குளமெல்லாம் மேடும் பள்ளமும் தண்ணீராக நிறைந்திருக்குமாம்!' என்று கூறி இறையருளை வியந்து வியந்து வாழ்த்



நந்தனர் கனவு

திக்கொண்டு நந்தனார் வேதியனைக் காண விரைந்து சென்றார்.

வேதியனோ, நந்தனாரை அடித்ததற்காகப் பச்சாத்தாபங் கொண்டு, 'ஐயோ, கோபம் சண்டாளமன்றோ? நல்ல மனிதனை அடித்துத் துரத்தினோமே!' என்று உள்ளத்தில் நரக வேதனை அனுபவித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு அன்றிரவு நன்றாகத் தூக்கம் பிடிக்கவில்லை. இந் நிலையில், 'ஐயரே வாரும்' என்று அழைத்திடும் நந்தனாரது பொன் போன்ற குரலைக் கேட்ட பிராமணனது நெஞ்சும் உடம்பும், அரைத்த சந்தனம் கொண்டு அப்பியது போலக் குளிர்ந்தது. 'சிதம்பரப் பித்தம் தெளிந்து நந்தன் வந்தான்; இனி முன் போலிருப்பான்; வழக்கம் போல் நடந்து கொள்வான். இதுவே தக்க சமயமாதலால் இவனிடம் நமது அந்தரங்க சித்தாந்தமாகிய உள்ளக் கருத்தை உள்ளவாறு வெளியிட்டு இனி ஒருபோதும் விலகாதபடி இவனை நம் வழிப்படுத்திக் கொள்ள வேண்டும்' என்று அவன் தீர்மானித்தான்.

நந்தனார் கும்பிடு போட்டு நின்றார். அவரை நோக்கிப் பார்ப்பான், 'கள்ளக் கும்பிடு தள்ளடா, காரியம் கைக்கொள்ளடா!' என்று கூறிவிட்டு, 'நந்தா, புத்தி வந்ததா? சித்தமும் தெளிந்ததா?

பத்தியும் தொலைந்ததா? தில்லையென்று சொன்ன தெல்லாம் இல்லையென்று போச்சுதா?' என்று பல கேள்விகளை அடுக்கினான். நந்தனார் விடை கூறு வதற்கு முன்னமே, 'நல்லது, நல்லது, மெத்த மெத்த சந்தோஷம்!' என்று உற்சாகமாகக் கூவி னான். நந்தனார் ஏதோ சொல்வதற்கு வாயை அசைத்தார். பார்ப்பான் அதற்கு அவகாசம் கொடாமலே, 'இப்படி அப்படிச் சொல்லாதே; தப்பெடுத் தடிப்பையா!' என்று வினவினான்.

மீண்டும் வேதியன், அவர் பேசுவதற்கு இடங் கொடாமலே தன்னுடைய அந்தரங்கமான சித்தாந்தக் கொள்கைகளை அவருக்கு உபதேசிக்கத் தொடங்கினான்.

"தெய்வம் என்பது குற்றம்
தெளிந்து பாரு சுற்றம்
கையைக் கொட்டு, சத்தம்
கண்டுகொள்ளு நித்தம்.
ஊணுறக்கமே இன்பம்
ஊணிழந்தால் துன்பம்
சாண் வயிற்றுக்கே அன்பு
சாதி முறைமை வம்பு

எனக்கூறி, 'ஓகோ, சபாசு! கண்டு கொண்டாய்' என்று உற்சாகப் படுத்தினான். பிறகு பிராமணன்,

"தில்லை யென்பது காட்டிலுண்டு
கேட்ட தில்லையா?

தேகம் பட்டால் புண்ணாகும்
பார்த்த தில்லையா?
அம்பல மாவது ஆகாசம்
உற்றுப் பாரு,
அருளில்லை பொருளில்லை
கண்டு தேறு''

என்று போதித்தான்.

அப்பால் அவன் உறுதியான குரலில்,

"எல்லாம் முழுப்புரட்டு,
வல்லான் வகுத்த வழி!
சொல்லாதே, சும்மா நில்லாதே.
"காரியத்தைப் பாரடா,
உனக்கிணை யாரடா,
காசுபணம் சேரடா
இது நல்ல ஊரடா!
காடு வெட்டி நஞ்சை பண்ணு,
மாடுகட்டி வைக்கோல் போடு,
பாடுபட் டுழைத்தா லன்றோ
வீடுகட்டி வாழலாம்''

என்று உபதேசித்து முடித்தான்.

ஆண்டைப் பார்ப்பானது வைதிக வேடத்திற் குள்ளும் சாஸ்திரக் கல்விக்குள்ளும் மறைந்து கிடந்த உலகாயத சித்தாந்தம் தம் பொருட்டு வெளிப்பட்டு வந்ததென அறிந்து நந்தனர் திடுக் கிட்டார்; 'அந்தோ! உலகம் இது தானோ?' என்று

எங்கினர். ஆனல் அவர் ஒன்றும் பதில் சொல்ல வில்லை.

நந்தனர், பண்ணை நிலங்களைப் பார்வை யிட வேண்டுமென்று வேதியனை வருந்தி யழைத் தார். விஷயம் இன்னதென்று அவனுக்கு விளங் கவில்லை. எனினும் அவன் நந்தனரோடு சென்று, சிவ கணங்களால் ஓர் இரவிலே நடுகை நட்டு அறுப்பறுக்க வேண்டிய நிலையிலிருக்கும் தன் வயல்களைக் கண்ணுற்ருன்.

பிராமணன், இந்திரஜால மகேந்திர ஜாலங் களை யெல்லாம் ஒருங்கே நோக்கும் பேதைபோல் ஒன்றும் தோன்ருது சிறிது நேரம் திகைத்துச் செயல் மறந்து நின்ருன். நந்தனர் கொஞ்ச நேரம் உலக வாசனையை விட்டு, அம்பலவாணனைக் கொண்டாடிக் கூத்தாடிக் கொண்டிருந்தார். பிறகு அவர், கைகொட்டி, 'ஐயரே, பாரும், பாரும் சிவ னரே வந்து செய்த காரியங்களை!' என்று கூவி னர்.

நந்தனருக்காகவே சிவபெருமான் அத்தகைய அற்புதம் விளைவித்தார் என்பதை வேதியன் இப் பொழுது உணர்ந்து கொண்டான்; 'சண்டாளன் என்று பேசியும் ஏசியும் இம்சித்தும் அறியா மனத்தால் இந்த மகா பக்த மணியை அபசாரம் பண்ணி விட்டோமே!' என்று வருந்தினன்;

சிறியவனுன தன் பிழைகளை யெல்லாம் பொறுத் தருள வேண்டுமென்று நந்தனுரை நோக்கிப் பிரார்த்தனை செய்தான்.

பிறகு பிராமணன் நடந்த வரலாற்றை அறிய விரும்பினுன். கனவிலே இறைவன் வந்து கருணை செய்ததை நந்தனுர் கூறினுர். பிராமணன் ஆச் சரியத்தால் விழுங்கப் பெற்றவனுகி, 'நந்தா, நீயே சிவபக்தன்! நான் தான் பித்தன்! நான் வேத சாஸ் திரங்களை யெல்லாம் கற்றேன்; கற்றும் என்ன பயன்? நம்பாமல் மோசம் போனேன்! ஓதா துணர்ந்த நீ எடுத்துரைத்த சிவபோதத்தை என் பிடிவாதத்தாலும் உலகாயத உள்ளத்திலுலும் ஏற் றுக் கொள்ளாமற் போனேன்' என்று புண்பட்ட நெஞ்சோடு புலம்பினுன். 'தனக்குப் புத்தி யுண்டு, வித்தை யுண்டு, பக்தி கிடையாது' என்று ஒப்புக் கொண்டு, 'ஆருக்குப் பொன்னம்பலவன் கிருபை யிருக்குமோ, அவனே பெரியவனும்!' என்று துணிந்தான்.

முடிவில், அவன் நந்தனுரை நோக்கி, "நந்த னுரே, உமக்குத் தில்லை யாண்டவரே அடிமையா ளாக வந்து அற்புதம் விளைத்தார்! இவ்வளவு பெருமை வாய்ந்த உம்மை அடிமை கொண்ட தாகக் கருதிய மூடனுகிய நான் இனி உமக்குத் தொண்டனுனேன். சிறியேனும் கடைத் தேற

மாறு கருணை கூர்ந்து யதார்த்த ஞானத்தைப் போதிக்க வேண்டும்" என்று வேண்டிக் கொண்டான்.

வேதியன் பன்முறையும் பிரார்த்தித்துக் கேட்டுக் கொண்டதற் கிணங்கி, நந்தனர் அவனுக்கு ஞான பக்தியின் மர்மங்களை உபதேசித்தார். இவ்வுபதேசத்தால் பிராமணன் பரிபக்குவ மடைந்து, 'நீ க்ஷேமமாகச் சிதம்பரம் சென்று வா' என்று நந்தனருக்கு விடை கொடுத்தனுப்பினன்.

பிறகு, அவர் தமது சேரித் தோழர்களிடம் விடைகொள்ள வேண்டுமென்று கருதினர். அவர்கள் அவரை விட்டுப் பிரிய மனமில்லாதவர்களாய், 'அண்ணே! அங்கே போகவேண்டாம். இந்த எல்லையிலிருந்தே ஈசனர் திருப்பெயரைச் சொல்லிக் கொண்டிருப்போம்' என்று சொன்னர்கள்.

அப்பொழுது நந்தனர், ஆண்டையே மனமுவந்து தம்மை அனுப்பி வைப்பதால், அன்பர்களும் தோழர்களுமான அவர்கள் இடையூருக இருக்கலாகாதென்று கூறினர். அப்படியானல், அவர் தில்லைக்குச் சென்று சீக்கிரம் திரும்பி வர வேண்டுமென்று அவர்கள் பிரார்த்தித்தார்கள்.

அவர்களது மன நிலை கண்டு, அனல் கண்ட மெழுகுபோல் உருகிய நந்தனர், அவர்களைத் தழு

விக் கண்ணீர் வடித்து, 'தில்லை வெளியிலே கலந்து கொண்டவர் திரும்பியும் வருவாரோ?' என்றார்.

அவர்கள், 'நாங்களும் கூட வருவோம்' என்று சொன்னார்கள். அவர் அதற்கு இணங்கவில்லை. 'நான் சிதம்பரம் போவேன். நீங்கள் இங்கேயே யிருந்து கடவுளை நம்பி உங்கள் கடமைகளை ஒழுங்காகச் செய்து கொண்டிருங்கள்; எந்த விதமும் பதம் பெறலாம்' என்று அவர்களிடம் வற்புறுத்திக் கூறி விட்டு, நந்தனார் சிதம்பரத்தை நோக்கிப் பிரயாணமானார்.

---

## பதின்மூன்றும் அத்தியாயம்

### சிதம்பர தரிசனம்

நந்தனார் ஆதனூரிலிருந்து விடும் அம்பு போலச் சென்றார். அவர் பல தலங்களையும் கடந்து நடராஜமூர்த்தியைச் சிந்தித்துக்கொண்டே ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் சென்றார். சில வேளைகளில், "ஆதனூரிலுள்ள ஒரு புலையனுக்காக அம்பல நாடகம் ஆடுகிறாரோ இறைவர்?' என்று அதிசயித்துக் கொண்டே விரைந்து செல்வார். சில வேளைகளில் சித்தரைப் போல் இறுமாந்தும் வேறு சமயங்களில் பித்தரைப்போல் தம்மை மறந்து புலம்பிக் கொண்டும் நடைகொள்வார். சில சமயங்களில், இவரது உள்ளம் சிதம்

எவ்வாறென்று நினைந்து மனமழிந்தார்; 'இறைவனே! அஞ்ச வேண்டாமென்று ஒருதரஞ் சொல்லி அழைத்தால் ஆகாதோ? அப்பா! தில்லைக்கரசே! நடனம் பயிலும் ஒளியே! சரணம், சரணம். நீர் எப்போது வருவீரோ? அருள் புரிவீரோ? வராமலிருப்பீரோ? நான் உம்மைப் பாராமலிருப்பேனே? என் வேதனையைக் கண்டு ஆதரிக்கும் தெய்வம் கிடையாதோ?' என்று இவ்வாறு புலம்பிப் புலம்பிப் புரண்டழுவார். 'இரட்சிக்க இதுவே சமயம். கருணைக்கடலென்று உம்மை நம்பி வந்தேன்' என்று போற்றுவார். மீண்டும், "இறைவர் தள்ளுவாரோ? கொள்ளுவாரோ? அவர் தள்ளினுலும், இத்தில்லையில் தானே என் தேகத்தை விடுவதன்றி இனி நான் திரும்பிப் போகமாட்டேன்" என்று கூறுவார். இவ்வாறு எண்ணுதெல்லாம் எண்ணியெண்ணி, நந்தனுர் அயர்வெய்தி, அவ்வயர்ச்சியோடு துயில் புரிவாராயினர்.

நந்தனுரது நித்திரையிலே நடராஜ மூர்த்தி வந்து காட்சி தந்து சொல்லுவார்:—"எமதன்பிற் சிறந்த பக்த மணியே! உன்னிடம் நமது தொண்டர்களான வேதியர்களை அனுப்புவோம். அவர்கள் முன் நீ எரி மூழ்கி யெழுந்து அவ்வேதியர்களுடனே நமது சபைக்கு வந்து தரிசனம் பெறுவாய்" என்றார்.

நடராஜப் பெருமான் பணித்த கட்டளையைக் கேட்ட தில்லை மூவாயிரவர் யாவரும், அம்பலவர் திருவாயிலின் முன்னே அச்சத்தோடு கூடி, அப் பெருமான் அருளிச் செய்த பணிவிடையை நாம் செய்வோம் என்று சுவாமியைத் துதித்து, நந்தனுரைத் தேடிச் சென்றார்கள்.

அந்தணர்கள் நந்தனுரை யடைந்து, 'ஐயரே, அம்பலவரருளால் இப்பொழுது உம்மிடத்து வந்தோம். தீயை உண்டாக்கி உமக்குத் தர வந்தோம்' என்று சொன்னார்கள். திருநாளைப் போவார் கசிந்த மனத்தோடு, 'அடியேன் உய்ந்தேன்' என்று கை கூப்பி வணங்கினர்.

பிறகு நந்தனர் தெற்குத் திக்கிலுள்ள மதிலின் புறத்தே, கோபுர வாயிலின் முன்னே, தில்லை மூவாயிரவர்கள் நெருப்பு உண்டாக்கிய குண்டத்திற் சென்று, ஆனந்த நடராஜ மூர்த்தியின் குஞ்சித பாதத்தை மனத்தில் தியானித்துக்கொண்டு, கை தொழுது எரியை வலமாகச் சூழ்ந்து, அந்த நெருப்பில் முழுகினர். அவ்வெரியின்கண், மயக்கத்திற் கேதுவான சரீரம் நீங்கியது. அப்பொழுது திருநாளைப் போவார் சடை முடி தாங்கிக் கொண்டு, தீயினின்றும் எழுந்தார்.

செந்தீயில் முழுகியெழும்போது, அவர் செம்மலர் மேல் உதித்தெழுந்த படைப்புக் கடவு

ளைப் போல் விளங்கினர். அப்பொழுது ஆகாயத்தில் தேவ துந்துபி ஒலித்தது. வானவர்கள் மகிழ்ந்து ஆரவாரித்து மலர் மாரி பொழிந்தனர். பக்தியின் பெயரால் செயற்கரிய தியாகம் செய்து முனிவராக வெளிப்பட்ட புனித மூர்த்தியான நந்தனரை, ஞானச் செல்வர்களான தில்லை மூவாயிர மறையோர்களும் கைகுவித்து வணங்கினர்கள். வேறு சிவனடியார்களும் வணங்கி மனங்களித்தார்கள். அந்நிலையில், திருநாளைப் போவார் தில்லை வாழந்தணர் உடன் செல்லச் சென்றடைந்து, நடராஜப் பெருமானது தெற்குக் கோபுரத்தைத் தொழுது வணங்கிச் சந்நிதிக்குள் பிரவேசித்தார். பிரவேசித்து, நடராஜ மூர்த்தியின் திருக்கோலத்தை யனுபவித்துக் கொண்டிருக்கையிலேயே அவரை யொருவரும் காணவில்லை. நந்தனர் இறைவனேடு கலந்து முக்தியடைந்தனர்.

நந்தமாமுனி என்னும் திருநாளைப் போவார் புரட்டாசி மாதம் உரோகிணி நட்சத்திரத்தில் கனகசபையில் வந்து முக்தி யடைந்தாரென்று பக்த விலாசம் கூறுகின்றது.

78075

THE B. N. PRESS, EDUCATIONAL PRINTERS, MADRAS—1933.

# எமது பிரசுரங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| நீதிக் கதா மஞ்சரி :— | | | | |
| உலகநீதி | ... | 0 | 2 | 0 |
| ஆத்திசூடி | ... | 0 | 2 | 0 |
| கொன்றைவேந்தன் | ... | 0 | 2 | 0 |
| வெற்றிவேற்கை | ... | 0 | 3 | 0 |
| ஸ்ரீ பாலகிருஷ்ணன் | ... | 0 | 5 | 0 |
| திருநாளைப்போவார் | ... | 0 | 6 | 0 |
| பால கர்ணன் | ... | 0 | 7 | 6 |
| நந்தனார் | ... | 0 | 8 | 0 |
| லெக்ஷ்மி | ... | (அச்சில்) | | |
| சரஸ்வதி | ... | ( ,, ) | | |
| திருநெல்வேலி ஜில்லா சரித்திரம் (திருத்திய புதிய பதிப்பு) | ... | (அச்சில்) | | |
| இந்திய சரித்திரக் கதைகள் | ... | 0 | 5 | 0 |

எஸ். ஆர். சுப்ப்ரமணிய பிள்ளை,
புக்செல்லர் அண்டு ஸ்டேஷனர்,
திருநெல்வேலி ஜங்ஷன்.